# மாலை தீப்பொறி

MALAE THEEPORI





2023 ஜூலை 16-31 தொகுதி 21 இதழ் 23

விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200


## நாம் ஒன்றுபட்டு எழுவோம்!


## “2024 தேர்தல் இந்தியாவைக் காப்பாற்ற ஒரு மாபெரும் மக்கள் இயக்கமாக இருக்கும்”

பா.ஜ.க. எல்லா விதத்திலும் நாட்டை சீரழிக்கிறது. நாம் பின்னோக்கி தள்ளப்படுகிறோம். இதனால்தான் எதிர்கட்சிகள் ஒன்று சேர்ந்து நமது அரசியலமைப்பை பாதுகாப்பது அவசியம்.

இந்த சந்திப்பு ஒரு வலுவான செய்தியை அனுப்பும்!


2024 தேர்தல் இந்தியாவை காப்பாற்ற மாபெரும் மக்கள் இயக்கமாக இருக்கப் போகிறது!

திபங்கர், பொதுச் செயலாளர்
சிபிஐ (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்)






# தோழர் ஆர் சுகுந்தனுக்கு செவ்வஞ்சலி



தோழர் ஆர்.சுகுந்தன் எனும் கீர்த்தி வல்லபன் (வயது 75), தோழர் சாருமஜூம்தார் அவர்களின் அழைப்பை ஏற்று நக்சல்பாரி இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர். தனது குடும்ப உறவுகளை துறந்து.. மக்கள் நலனே..! கட்சியின் நலன்..! என்று நாற்பது ஆண்டுகாலம் பணியாற்றியவர். 1970களின் பிற்பகுதியில் தோழர் சுகுந்தன் சென்னை சிம்சன் தொழிற்சங்க இயக்கத்தின் போராட்ட முன்னணியாக செயலாற்றிய காலத்தில் சிபிஐஎம்எல் (லிபரேசன்) கட்சியில் முழுநேர ஊழியராக தனது புரட்சிப் பணியைத் துவக்கியவர். ஒருங்கிணைந்த தஞ்சை, திண்டுக்கல் என பல்வேறு மாவட்டங்களில் கிராமபுற ஏழைகள் மத்தியில் பணியாற்றியவர், 1990களின் துவக்கத்தில் கட்சியின் மாநிலச் செயலாளராகவும் இருந்தார். கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக.. ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத்தில் ஆம்பூர் வாணியம்பாடி பகுதியை மையமாக கொண்டு, கட்சி அலுவலகத்தில் இருந்து தோல் மற்றும் தோல் பொருட்கள் தொழிற்சாலை தொழிலாளர்கள் மத்தியில் இயக்க பணியாற்றி வந்தவர். திருச்சியில் நடைபெற்ற சிபிஐஎம்எல் கட்சி மாநில மாநாட்டிலும், பீகார் தலைநகர் பாட்னாவில் நடைபெற்ற 11 ஆவது கட்சி காங்கிரஸிலும் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டு கருத்துக்களை முன் வைத்தவர், மேற்கண்ட பல்வேறு சிறப்புகளுக்குரிய தோழர் சுகுந்தன் அவர்கள் உடல்நல குறைவால் ஒரு வார காலம் வேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் ஜூலை 06, 2023 அன்று மதியம் 2.00 மணியளவில் இயற்கை எய்தினார்.

தோழரின் உடல், ஜூலை 07,2023 ஆம்பூர் AICCTU - LLGDLU தோல் மற்றும் தோல் பொருட்கள் ஜனநாயக தொழிலாளர்கள் சங்க அலுவலகத்தில், திரளாக தொழிலாளர்கள் அணிதிரண்டு இருக்க தோழர் சுகுந்தன் அவர்களுக்கான இறுதி அஞ்சலி நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

LLGDLU செயலாளர் தோழர் சதீஷ் தலைமையில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்ச்சியில், இகக(மாலெ) மத்திய கமிட்டி உறுப்பினர்கள் தோழர் பாலசுந்தரம் மற்றும் தோழர் சந்திரமோகன், கட்சி மத்திய கட்டுப்பாட்டு ஆணைய உறுப்பினர் தோழர் கிருஷ்ணவேணி, மாநிலக் கமிட்டி உறுப்பினர்கள் தனவேல், ராஜசங்கர், ஜெகதீஸ், சுப்புராமன், வேலூர் மாவட்ட சிம்புதேவன், திண்டுக்கல் முருகேசன், திருவண்ணாமலை ஆறுமுகம் மற்றும் மாந்தநேயன் உள்ளிட்ட பல்வேறு தொழிற்சங்க முன்னணிகள், தலைவர்கள், வழக்கறிஞர்கள், ஜனநாயக சக்திகள் பலரும் அஞ்சலி செலுத்தி உரை ஆற்றினர். தொழிலாளர் வர்க்கத்தை அரசியல் படுத்த வேண்டும்!" என்ற அவர் விட்டுச் சென்ற கடமையை முன்னெடுத்து செல்வோம்! தோழர் சுகுந்தனுக்குச் செவ்வணக்கம்!!



2023 ஜூலை 16-31

மாலெ தீப்பொறி

இருவார இதழ்

தொகுதி 21 இதழ் 23

உள்ளே

| | |
|---|---|
| பார்வினைக் காப்போம் | 4 |
| பொது சிவில் சட்டம் வேண்டாம் | 8 |
| கட்டுமான தொழிலாளர் சங்க மாநாடு | 11 |
| அகில இந்திய கட்டுமான தொழிலாளர் சுவட்மைப்பு தேசிய மாநாடு | 12 |

ஆசிரியர்

ஜி.ரமேஷ்

ஆசிரியர்குழு

பாலசுந்தரம்

பழ.ஆசைத்தம்பி

அ.சந்திரமோகன்

கே.ஜி.தேசிகன்

மேலாளர்

சொ.இரணியப்பன்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக்கமிட்டியின் அரசியல் ஏடு

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம்,
சென்னை – 600023

நிர்வாக அலுவலகம்

3/254பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை – 600048

தொலைபேசி: 9443507067
9840340741

malaetheepori@gmail.com
www.tamilnadu.cpiml.net
cpimlthamilnadu.blogspot.com

தலையங்கம்

# இந்தியாவைக் காக்க இந்தியா

பாசிச பாஜக-ஆர்எஸ்எஸ் பிடியிலிருந்து இந்தியாவையும் இந்திய மக்களையும் காப்பதுதான் தற்போதைய தலையாய கடமை என்கிற அடிப்படையில், எதிர்க்கட்சிகளின் தலைவர்கள், பெங்களூருவில் 2023 ஜூலை 17-18 தேதிகளில் கூடி, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை, மதச்சார்பின்மையைப் பாதுகாப்போம், ஜனநாயகம் காப்போம், சமூகநீதி காப்போம் என்ற குறிக்கோளுடன் 2024 நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலில் பாசிச பாஜகவைத் தோற்கடிக்க வேண்டும் என்ற லட்சியத்தியத்திற்காக 'இந்திய தேசிய உள்ளடக்கிய வளர்ச்சிக் கூட்டணி'(Indian National Developmental Inclusive Alliance - INDIA)யை உருவாக்கியிருக்கிறார்கள். இந்தக் கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்- லெனினிஸ்ட்)விடுதலை இகக(மா), இகக, காங்கிரஸ், ஐக்கிய ஜனதா தளம், ராஷ்ட்ரிய ஜனதா தளம், திமுக, விசிக, மதிமுக உள்ளிட்ட 26 கட்சிகள் அங்கம் வகிக்கிக்கின்றன. எதிர்க்கட்சிகளின் பலம் வலுவடைந்து வரும்நிலையில், பாஜக 38 கட்சிகளைக் கொண்ட தேசயி ஜனநாயகக் கூட்டணியின் கூட்டத்தைக் கூட்டியது. அதில், பெரும்பான்மையான கட்சிகள், எதிர்க்கட்சியாக இருந்தபோது பாஜகவால் ஊழல் குற்றம் சுமத்தப்பட்டு, தங்கள் பக்கம் இழுக்கப்பட்டு பாஜக சலவை எந்திரத்திரத்தால் புனிதப்படுத்தப் பட்டவர்கள். பாஜக-ஆர்எஸ்எஸ், மோடி-அமித்ஷா இரட்டை என்ஜின் தொடர்ந்து எதிர்க்கட்சிகளை உடைக்கின்ற வேலையைச் செய்து கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் ஆளுநர் ஆர்.என்.ரவியைக் கொண்டு கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரான அராஜகமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அமைச்சர் செந்தில் பாலாஜியை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கிய ஆளுநர் ஆர்.என்.ரவி, குட்கா புகழ் அதிமுக அமைச்சர் விஜயபாஸ்கர் மீது நடவடிக்கை எடுக்க அனுமதி வழங்காமல் பலதடவை ஒத்தி வைக்கிறார். செந்தில் பாலாஜியை அடுத்து, இப்போது தமிழ்நாடு உயர்கல்வித் துறை அமைச்சர் பொன்முடி மற்றும் அவரது மகனும் நாடாளுமன்ற உறுப்பினருமான கவுதம சிகாமணி ஆகியோர் வீடுகளில், அலுவலகங்களில் மோடி-அமித்ஷாவின் அடிமைத்துறையான அமலாக்கத்துறை சோதனைகள் நடத்தி விசாரணை மேற்கொண்டு வருகிறது. ஊழல் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றால், பாரபட்சம் இல்லாமல் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். ஆனால், அதிமுக போன்ற பாஜகவின் அடிமைகள் என்றால், ஒரு விதமான நடவடிக்கை, எதிர்க்கட்சிகள் என்றால் ஒருவிதமான நடவடிக்கைகளை இரட்டை என்ஜின்கள் மேற்கொண்டு வருகின்றன. அது மட்டுமின்றி, பாஜக மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் ஆளுகின்ற மாநிலங்களில் ஊழல்களே நடக்காததுபோல, அமலாக்கத்துறையும், மற்ற ஊழல்கள் தடுப்புத் துறைகளும் நடந்து கொண்டிருக்கின்றன. இம்மாதிரி என்ன செய்தாவது எதிர்க்கட்சிகளைப் பலவீனப்படுத்திட வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு மோடி-அமீத்ஷா கூட்டணி செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில், எதிர்க்கட்சிகள், குறிப்பாக ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் எதிர்க்கட்சிகள், மக்களைத் தங்கள் பக்கம் முழுமையாக நிற்க வைக்கும் நடவடிக்கைகளை, கொள்கைத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். ஏனென்றால், பாஜக தன் கையில் உள்ள துறைகள் மூலமாக தன்னைத் தவிர மற்ற கட்சிகள் எல்லாம் ஊழல், கட்சிகள் என்று மக்கள் முன் சொல்லப் பார்க்கிறது. அதற்காக நடத்தப்படுவதுதான் இந்த மாதிரியான சோதனைகள். அதுவும் குறிப்பாக தமிழ்நாட்டில். இந்நிலையில் தமிழ்நாட்டில் மின் கட்டண உயர்வு, சாராய விற்பனை, சாராயச் சாவுகள், சாதியாதிக்கக் கொலைகள், பெண்கள் உரிமைத் தொகையில் இருந்து பெரும் எண்ணிக்கையிலான வர்களை நீக்க முயற்சிப்பது போன்றவைகளால் திமுக அரசுக்கு எதிராக மக்கள் மனோபாவம் மாறிவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய கடமை இந்தியாவைக் காக்கும் 'இந்தியா' கூட்டணியில் உள்ள திமுகவிற்கும் இருக்கிறது. ❑

# இருண்ட, பிற்போக்குச் சக்திகளைத் தோற்கடிப்போம்!

## டார்வினைக் காப்போம்! அறிவியல் முன்னேற்றத்தைப் பாதுகாப்போம்!!

**அரிந்தம் சென்**

*கருத்தியல் திணிக்கப்பட்ட, அரசியல் உள்நோக்கம் கொண்ட புதிய கல்விக் கொள்கை 2020 மிகவும் வசதியாக பெருந்தொற்று காலத்தைப் பயன்படுத்தி அறிமுகப்படுத்தப்பட்டது. இப்போது கடுமையான, பெரிய அளவிலான திருத்தங்களை பள்ளிப்பாடப் புத்தகங்களில் மேற்கொள்வதன் மூலம் அது அமல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.*

*இந்தியாவின் கலை மற்றும் இலக்கியத்தில், அறிவியல் மற்றும் சமூக நெறிமுறைகளில், பொருளாதார முன்னேற்றம் மற்றும் நிர்வாக நெறிமுறைகளில் - என எல்லாவற்றிலும் முஸ்லீம் 'படையெடுப்பாளர்களுடைய' ஆழமான பங்களிப்பு களை அழிப்பது தேசியவாதத்தின் பெரும் சாதனை என வெளிப்படையாக, பெருமையாகச் செயல்பட்டார்கள் என்றால், தற்போது முடிந்தவரை தந்திரமாக சார்லஸ் டார்வினின் பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டை நீக்கியுள்ளார்கள். இதற்கு இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் பரவலாக எழுந்த விமர்சனத்தின் காரணமாக, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மன்னிப்பு கோரி விளக்கம் அளித்தார்கள். பத்தாம் வகுப்பு பாடப் புத்தகங்களில் இருந்து அது நீக்கப்பட்டிருப்பினும், மாணவர்கள், பன்னிரண்டாம் வகுப்பில் இந்தப் பகுதியை, முன் போலவே படிப்பார்கள் என்றனர். இதில் மறைக்கப்பட்ட உண்மை என்னவென்றால், யாரெல்லாம் அ) பத்தாம் வகுப்பு முடித்த பின்னர் அறிவியல் பாடத்தில் சேர வேண்டும் மற்றும் ஆ) உயர் வகுப்புகளில் உயிரியல் பாடத்தை தங்கள் பாடங்களில் ஒன்றாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் ஆகிய இரண்டு நிபந்தனைகளை நிறைவேற்றுகிறார்களோ அவர்களுக்கு அச் சந்தர்ப்பம் வாய்க்கும் என்பதுதான். யாரெல்லாம் இந்த இரண்டு நிபந்தனைகளையும் நிறைவேற்றவில்லையோ அவர்களுக்கு இச் சந்தர்ப்பம் கிடைக்காது -அடிப்படை அறிவியல் பற்றிப் படிப்பதற்கான உரிமை பறிக்கப்பட்டுவிடும். அதேபோல், உயர்நிலைப் பள்ளிப் படிப்பிற்கு பின்னர் சூழ்நிலைகளின் கட்டாயத்தால் பள்ளிப் படிப்போடு நிறுத்தப்படும் பெருவாரியான மாணவர்களுக்கும் இந்த வாய்ப்பு கிடைக்காமல் போகும்.*

**கொரோனா பெருந்தொற்றுக்குப் பின்னர் 'மாணவர்களுக்குச் சுமையைக் குறைப்பதற்கு' இந்த மாற்றங்கள் தற்காலிக அறிமுகப்படுத்தப்பட்டதாகச் சொன்னார்கள். ஆனால், பள்ளிக்கூடங்கள் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பிய பின்னரும் இந்த மாற்றங்கள் இருந்து கொண்டிருக்கின்றன.**

*இவ்வாறாக, (வரலாற்றுப் பாடத்திட்டம் போலவே) முடமாக்கப்பட்ட உயிரியல் பாடத் திட்டத்தால் பெரும்பான்மை யான மாணவர்களுக்கு தாங்கள் கற்றுக்கொள்ள வேண்டியதில்*

*அடிப்படையான மிக முக்கியமான பகுதியை கற்க வாய்ப்பில்லாமல் போய்விடும். திட்டத்தை சேறாக்கி, தேசத்தை ஏமாற்றும் தந்திர வழியாகும். கொரோனா பெருந்தொற்றுக்குப் பின்னர் 'மாணவர்களுக்குச் சுமையைக் குறைப்பதற்கு' இந்த மாற்றங்கள் தற்காலிகமாக அறிமுகப்படுத் தப்பட்டதாகச் சொன்னார்கள். ஆனால், பள்ளிக்கூடங்கள் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பிய பின்னரும் இந்த மாற்றங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. இது (மக்களுக்கான, இப்போது மாணவர்களுக்கான) ஒரு பிரச்ச னையை, மாணவர்களைப் பலிகடாவாக்கி தனக்குச் (பாஜகவுக்குச்) சாதகமாக மாற்றிக் கொள்ளும் மோடி பாணியின் மற்றொரு துர்நாற்றமடிக்கும் நிகழ்வாகும்.*

*எப்படியிருந்தாலும், 'இஸ்லாம் அபாயம்' பற்றிப் பேசும் வெறியர்கள் ஒரு இந்துத்துவ கண்ணோட்டத்துடன் இந்திய வரலாற்றைச் சிதைக்கவும் சீர்குலைக்கவும் ஏன் தலைகீழாக நிற்கிறார்கள் என்பதை எளிதில் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால், எதற்காக அறிவியல் மீதான தாக்குதல்கள்? நல்லது, சீர்குலைக்கப்பட்ட அடக்குமுறை மதவாதத்தை கண்ணை மூடிக் கொண்டு ஏற்றுக் கொண்டு வெறுப்பு காட்டுவது, எந்திரத்தனமான ஒழுக்கத்தை அதிகாரத்தில் இருப்பவர்களுக்குக் காட்டுவது ஆகியவற்றின் மூலம் பாசிஸ்டுகள் தங்களது நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றுகிறார்கள்.*

*மாபெரும் அறிவியல் அறிஞர்கள் பலர் இருக்க டார்வினை ஏன் முதலில் குறி வைக்கி றார்கள்? ஏனென்றால், அவருடைய கண்டுபிடிப் பானது (அவருடைய தனிப்பட்ட ஆளுமை பற்றி அல்ல) மதத்தை வைத்து அரசியல் வியாபாரம் செய்து வளமாக வாழ்ந்தவர்கள், வாழ்பவர்க ளுக்கு மிகவும் வலிமையான எதிரியாக இருந்தது, இருந்து கொண்டிருக்கிறது. அது பற்றி விவரமாகப் பார்ப்போம்.*

*டார்வின், அவருடைய முன்னோடிகள் மற்றும் சமகால உயிரியல் அறிஞர்களின் வேலைகளை அடிப்படையாகக் கொண்டு, உலகளாவிய நம்பிக்கையான இந்த பூமி, அதில் உள்ள தாவரங்கள், மனித இனம் உள்ளிட்ட மிருகங்கள் அனைத்தும் கடவுளால், அவர் எந்தப் பெயரில் அழைக்கப்பட்டாலும், உருவாக்கப்பட்டது என்பதை அடித்து நொறுக் கினார். வாழ்க்கையானது அதன் புராதான வடிவத்தில் பல பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கியது, அதனுடைய பரிணாம மானது இயற்கையாக – தெய்வீகத் தேர்வால் அல்ல– எண்ணற்ற உயர்ந்த வடிவங்களுக்குள் ளாகி இன்று வரை தொடர்ந்து கொண்டிருக்கிறது என்பதை நிரூபித்துக் காண்பித்தார். அவர் கடவுளை மறுத்து ஒரு வார்த்தை கூட உச்சரித்த தில்லை, ஆனால் அவருடைய அறிவியல் படைப்பானது கடவுள் என்பது கற்பனையானது எனக் காட்டியது.*

*பொது மக்களைப் பொறுத்தவரை இது மிகவும் மோசமானதும் முற்றிலும் ஏற்றுக் கொள்ள முடியாததும் பரிதாபகரமாக அதிர்ச்சி யளிக்கக் கூடியதுமாகும். ஆனால், மத அடிப் படைவாதிகளும் குழப்பவாதக் குழுக்களும் இவர் தங்களுக்கு நேரடியாகச் சவால் விடுகிறார் என்பதை உடனடியாகப் புரிந்து கொண்டார்கள். அவருடைய சமகாலத்தவர்களான கலிலியோ கையிலி மற்றும் புரூனோ பவர் ஆகியோர் கடவுளை நிந்தித்த கொடூரக் குற்றம் புரிந்தவர் களாக சித்தரிக்கப்பட்டார்கள். 1859ல் வெளியி டப்பட்ட 'இயற்கைத் தேர்வின் மூலமாக உயிரனங்களின் தோற்றம்' புத்தகம் மிகப் பெரும் மரியாதையைப் பெற்று, உலகம் முழுவதும் உள்ள இருண்ட, பிற்போக்குத்தன மான பின்தங்கிய சக்திகளின் தலைமுறைகளுக்கு நிரந்தரமான அடியைக் கொடுத்தது.*

*ஆனால், அந்த நேரத்தில் நல்ல மனம் கொண்டவர்களால் சகாப்தம் படைக்கும் இத் தொகுப்பானது அன்புடன் வரவேற்கப்பட்டது. அவர்களில் ஒருவர் கார்ல் மார்க்ஸ். அவருடைய 'அரசியல் பொருளாதார விமர்சனத்திற்கான பங்களிப்பு' என்ற புத்தகமும் டார்வினின் மகத்தான படைப்பு வெளிவந்த அதே ஆண்டில் வெளியிடப்பட்டது. மார்க்ஸும் ஏங்கல்ஸும் அந்த புத்தகத்தை பெரும் ஆச்சரியத்துடன் ஆழ்ந்து கவனித்துப் படித்தார்கள். அதற்கடுத்த ஆண்டு ஏங்கல்ஸிற்கு எழுதிய ஒரு கடிதத்தில் "நமது பார்வைகளுக்கான இயற்கை வரலாற்று அடித்தளத்தை இந்த புத்தகம் கொண்டுள்ளது என்று மகிழ்ச்சியோடு தெரிவித்தார். மூலதனம் புத்தகத்தின் முதல் தொகுதி 1873ல் வெளியிடப் பட்டபோது, ஒரு புத்தகத்தில் தனது கையொப் பத்தைப் போட்டு அதை டார்வினுக்கு அனுப்பி வைத்தார் மார்க்ஸ். பின்னர் டார்வின், மார்க்ஸிற்கு நன்றி தெரிவித்து, "நம்முடைய ஆய்வுகள் வெவ்வேறானவை என்ற போதிலும், நாம் இருவரும் அறிவை விரிவுபடுத்திக் கொள்ள*

தீவிரமாக விரும்புகிறோம் என்றும் நீண்ட கால நோக்கில் இது மனித குலத்தின் மகிழ்ச்சிக்கு நிச்சயமாக அணிசேர்க்கும் என்றும் நான் நம்புகிறேன்' என எழுதியிருந்தார்.

அது எவ்வளவு உண்மையானது! ஒவ்வொரு விசயத்திலும் இருவருக்குமிடைய பல மைல்கள் தூரம் என்றிருந்தாலும், அறிவொளி அளிக்கும் பெரும் பணியில், அதன் மூலம் மனிதகுல விடுதலைக்கான பணியில் இருவரும் தோழர்களாக இருந்தார்கள். பல ஆண்டுகளுக்கு பின்னர் ஏங்கல்ஸ், பொன் எழுத்துக்களால் பொறிக்கப் பட வேண்டிய வாக்கியமான "இயற்கையின் இயல்பான வளர்ச்சியின் விதியைக் டார்வின் கண்டுபிடித்தார் என்றால், மார்க்ஸ் மனித வரலாற்றின் வளர்ச்சியின் விதியைக் கண்டு பிடித்தார்"என்று இருவரையும் இணைத்துக் குறிப்பிட்டார்.


இதனால்தான், மார்க்ஸும் டார்வினும் எல்லா இடங்களிலும் பொதுவான எதிரிகளைக் கொண்டுள்ளார்கள். 'ஆச்சார்யா' தீன தயாள் உபாத்யாயா, டார்வின் கோட்பாட்டிற்கு எதிராக, அவருடைய (பாஜகவின்) தத்துவத்தை முன் வைத்தார்: "பொருத்தப்பாடுடன் உயிர்வாழ்தலே வாழ்க்கையின் ஒரே அடிப்படை என்பது டார்வின் கொள்கையாகும். ஆனால், அனைத்து வாழ்வின் அடிப்படை ஒற்றுமைதான் என்பதை இந்த நாட்டில் நாம் பார்த்தோம்...". என்னவொரு தகுதியில்லாத முட்டாள்தனமான ஒரு மறுப்பு! அந்த மாபெரும் உயிரியியல் அறிஞர், வாழ்க்கையின் ஒரே அடிப்படை பொருத்தப்பாடுடன் உயிர்வாழ்தல் என்று ஒருபோதும் பரிந்துரைக்கவில்லை.

அறிவியல் மீதான தாக்குதல் தொடர்ந்து நடந்தது. சங்கிகள் அதிகாரத்திற்கு வந்த பின்னர் அரசின் நேரடி ஆதரவுடன் அது ஆழப்படுத் தப்பட்டது. 2014ல் பிரதமர் மோடி பந்தை முதலில் உருட்டிவிட்டார். பண்டைய இந்தியாவில் பிளாஸ்டிக் சர்ஜரி இருந்ததற்கு பிள்ளையாரின் யானைத் தலையும் மரபியல் அறிவியல் இருந்ததற்கு கர்ணனின் மர்மமான பிறப்பும் சாட்சிகளாகும் என்றார். கட்டுக் கதைகளும் பொய்ச் செய்திகளும் கணக்கில் லாமல் பரப்பப்பட்டன. 2018ல் மனித வள முன்னேற்ற அமைச்சராக இருந்த சத்யபால் சிங் ஒரு அதிர்ச்சிகரமான அறிவிப்பை வெளி யிட்டார். டார்வினின் பரிணாம வளர்ச்சிக் கோட்பாடானது அறிவியல் ரீதியாக தவறானதாகும். ஏனென்றால், "ஒரு குரங்கு ஒரு மனிதனாக மாறியதை ஒருவரும் பார்த்ததில்லை" என்றார். இந்தியாவில் உள்ள மூன்று அடிப்படை அறிவியலுக்கான கல்விக்கூடங்கள் ஒன்று சேர்ந்து, மாபெரும் அறிவியல் கண்டுபிடிப்புக்கு எதிரான வெக்கக் கேடான இந்தத் தாக்குதலை கண்டித்தன. இந்திய தேசிய அறிவியல் கல்விக் கூடத்தின் முன்னாள் தலைவரும் சர்வதேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட உயிரியியல் அறிஞருமான ராகவேந்திர கடாக்கர், சத்யபால் சிங்கின் பாஜக-ஆர்எஸ்எஸ்ஸின் திட்டமானது அறிவியல் பற்றியது அல்ல, அரசியல் பற்றியது என்று குறிப்பிட்டார். என்டிடிவிக்கு பேட்டி யளிக்கும் போது, அறிவியலையும் அறிவியல் அறிஞர்களையும் அரசியல் ரீதியாக துருவச் சேர்க்கை உருவாக்குவது உண்மையிலேயே ஆபத்தாகும். அதை நாம் எதிர்த்தாகவேண்டும் என்றார். எதிர்ப்புகள் காரணமாக, அரசாங்கம் பின்வாங்கியது, அரசாங்கத்திற்கும் அமைச்சரின் அறிவிப்புக்கும் சம்பந்தமில்லை என்றது.

ஆனால், அந்த பின்வாங்குதல் தற்காலிக மானது, இன்னும் நன்கு திட்டமிட்ட பிரச்சாரத் திற்கான முன்னோட்டம். பாஜக இரண்டாவது முறை ஆட்சிக்கு வந்தது, இம் முறை அதன் சொந்த பலத்தில் வந்தது. பண்டைக்கால அறிவு, ஆராய்ச்சி என்ற பெயரில் கட்டுக் கதைகளுக்கு அறிவியல் முலாம் பூசும் நோக்கத்துடன் ஆராய்ச்சி மையங்களில், பல்கலைக் கழகங் களில் போலி அறிவியல் நடவடிக்கைகளை துடிப்புடன் செயல்படுத்தியதைக் கண்டோம். 2019லேயே, ஆந்திரப் பிரதேச பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் நாகேஷ்வர ராவ், 106வது இந்திய அறிவியல் மாநாட்டின் மேடையை தன் கருத்திற்காகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். டார்வின் கோட்பாட்டைவிட தசாவதாரம் (விஷ்ணுவின் பத்து அவதாரங்கள் வாயிலாக மனிதர்களின் பரிணாமம்) பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டைக் கொடுத்துள்ளது என்றார். அந்தக் கூட்டத்தில், நியூட்டன் மற்றும் ஐன்ஸ்டீன் கோட்பாடுகளை நீக்கும் தாள்கள் கூட முன் வைக்கப்பட்டன. உயர் மட்டத்திலிருப்பவர் களின் வழிகாட்டுதலின்படி, நிதி வழங்கும் நிறுவனங்களான அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறை மற்றும் அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சிக் கவுன்சில் போன்றவை, பசுவின் மூத்திரம், பசுவின் சாணம், ஆன்மீக விவசாயம், மருத்துவ ஜோசியம் உள்ளிட்ட பண்டைய அறிவியல் பாடத்திட்டத்தின் கீழ்

ஆராய்ச்சி மேற்கொள்வதற்கு பெரும் ஆதரவு அளித்தன. நாம் மேலே விவரித்தபடி இது புதிதாக வடிவமைக்கப்பட்டு அமல்படுத்தப் பட்டுக் கொண்டிருக்கும் புதிய கல்விக் கொள்கை 2020ன் வெற்றிகரமான சுற்றுசூழல் பகுதியாகும்.

இம்முறையும் கூட, எதிர்ப்புகள் செத்துப் போய்விடவில்லை. இந்திய அளவில் சுதந்திர மான அறிவியல் அறிஞர்கள் மற்றும் கல்வி யாளர்களைக் கொண்ட 'பிரேக்த்ரு சயின்ஸ் சொஸைடி' என்கிற குழு ஒன்று 1800க்கும் அதிகமான அறிவியல் அறிஞர்கள், அறிவியல் ஆசிரியர்கள், கல்வியாளர்கள் கையொப்பமிட்ட ஒரு திறந்த மடலை இந்த ஆண்டு 20ம் தேதி எழுதியுள்ளார்கள். பாடத்திட்டங்களில் மாற்றங்கள் செய்வதை ஏன் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதை விவரித்துள்ளார்கள். அதில் இவ்வாறு கூறியிருக்கிறார்கள்...




*"உயிரியல் பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டை அறிந்து கொள்வது புரிந்து கொள்வது என்பது உயிரியல் பாடத்தின் ஒரு பகுதியாக அல்ல, நம்மைச் சுற்றியிருக்கும் இவ்வுலகைப் புரிந்து கொள்வதற்கான முக்கியமான ஒன்றாகும். பரிணாம உயரியலானது அறிவியலின் ஒரு பகுதியாகும். சமூகங்களில், தேசங்களில் மருத்துவம் முதல் மருந்து கண்டுபிடிப்பு, தொற்று நோயியல், சூழலியல், மனோதத்துவம் வரை வரிசையாக நாம் சந்திக்கும் பிரச்சினைகளை எவ்வாறு எதிர்கொள்கிறோம் என்பதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகும். மேலும் வாழ்க்கை அரங்கில் மனிதர்கள், அவர்களின் வாழ்விடங்கள் தொடர்பான நம்முடைய புரிதல்கள் பற்றியும் பேசுகிறது. நம்மில் அநேகர் வெளிப்படையாக அதை உணரவில்லை என்றபோதிலும் இயற்கைத் தேர்வுக் கொள்கைகள், தொற்றுநோய் பரவல்கள் எவ்வாறு ஏற்படுகின்றன அல்லது ஏன் சில உயிரனங்கள் அழிந்து போகின்றன உள்ளிட்ட முக்கியமான பிரச்சினைகளைப் புரிந்து கொள்வதற்கு உதவுகின்றன.*

*பரிணாம வளர்ச்சியின் புரிதல் என்பது மிக முக்கியமாக அறிவியல் மனப்பான்மையையும் உலகளாவிய பகுத்தறிவுப் பார்வையையும் கட்டமைக்கிறது. டார்வினின் வலிமிகுந்த கண்டுபிடிப்புகளும் அவருடைய கூரிய நுண்ணறிவுகளும் பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டை உருவாக்கச் செய்தது. அது மாணவர்களுக்கு அறிவியல் செயல்முறையையும் விமர்சனபூர்வ சிந்தனையின் முக்கியத்துவத்தையும் கற்றுக் கொடுக்கிறது. பத்தாம் வகுப்பிற்குப் பின்னர் உயிரியல் பாடத்தைப் படிக்கும் வாய்ப்பை இழக்கும் மாணவர்களுக்கு மிக முக்கியமான இந்தப் பாடத்தைப் பற்றி ஒரு படிப்பும் இல்லாமல் செய்வது கல்வியின் கேலிக் கூத்தாகும்.*

*இதன் கீழ்க் கையொப்பமிட்டுள்ள அறிவியல் அறிஞர்கள், அறிவியல் ஆசிரியர்கள், கல்வியாளர்கள், அறிவியலை பிரபலப்படுத்துபவர்கள் மற்றும் அக்கறையுள்ள குடிமக்கள்... ஆகிய நாங்கள் பள்ளிக் கல்வியில் மீண்டும் டார்வின் கோட்பாட்டை கொண்டு வரும்படிக் கேட்டுக் கொள்கிறோம்."*

நாம் இப்போது ஓர் அழைப்பு விடுக்க வேண்டியதிருக்கிறது. மதச்சார்பின்மை கொண்ட, ஒத்திசைவு மதிப்புகள் கொண்ட, அறிவியல் மனப்பான்மை கொண்ட நாம் மிகவும் போற்றுகின்ற நம் அன்புக்குரிய தேசத்தை இருண்ட பள்ளத் திற்குள் கொஞ்சம் கொஞ்ச மாகத் தள்ளுவதற்கு நாம் அனுமதிக்கலாமா? முடியாது. நாம் அனைவரும், குறிப்பாக நம்முடைய மாணவ மற்றும் இளந்தோழர்கள், நாம் பணிபுரியும் களங்களில் இருந்து 18000த்திற்கும் அதிகமாகக் கையொப்பமிட்ட வர்களுடன் இணைந்து, அறியாமை, தெளி வின்மை மற்றும் அறிவியலுக்கு எதிரான ரதத்தை திருப்பி அனுப்பிடுவோம். ஆரோக்கிய மான கல்விக்காக, அறிவியல் மற்றும் ஆய்வுகளுக்காக நாம் போராடுவோம். ❑

**லிபரேஷன், ஜூன் 2023**

**தமிழாக்கம் – சங்கரந்தம்பி**

## பாலின நீதியும் சமத்துவமும் வேண்டும்; பொது சிவில் சட்டம் என்ற பெயரில் வகுப்புவாத துருவச் சேர்க்கையை ஏற்படுத்தும், முஸ்லிம்களை தீயவர்களாக சித்தரிக்கும் அரசியல் வேண்டாம்!

**பொது சிவில் சட்டம் குறித்த அதன் கருத்துகள் பற்றி அரசாங்கம் இன்னும் திட்டவட்டமான முன்மொழிவு எதையும் கொண்டு வராத நிலையில், சங்-பாஜக பரப்புரையாளர்கள் ஏற்கனவே முஸ்லீம் சமூகத்தை இழிவு படுத்துவதில் மும்முரமாக இறங்கியுள்ளனர்.**

*போபாலில் வாக்குச்சாவடி மட்ட அளவிலுள்ள பாஜக தொண்டர்களிடம் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றும் போது, பொது சிவில் சட்டத்திற்கு ஆதரவாக உரத்த கூச்சலை எழுப்பினார்கள். சிறிது நேரத்தில், அதே மாநிலத்தில் இருந்து, அதிகார போதையில் மிதந்த பாஜக இளைஞரணித் தலைவரான பிரவேஷ் சுக்லா, தஸ்மத் ராவத் எனும் ஆதிவாசி தொழிலாளி மீது சிறுநீர் கழிக்கும் காணொளி வெளியாகி, சமூக ஊடகங்களில் அதிவேகமாகப் பரவியது. இருபதாண்டுகளாக பாஜக ஆட்சியில் இருக்கும் மத்தியப் பிரதேசத்தில் உண்மையிலேயே களத்தில் நிலவும் அநாகரிக நடத்தையை, காட்சிகளை அதிர்ச்சியூட்டும் இந்தக் காணொளி சித்தரித்துக் காட்டியது. விளிம்பு நிலையிலிருக்கும் ஒடுக்கப்பட்ட சமூகக் குழுக்களுக்கு எதிராக நடைபெறும் இத்தகைய கொடுமையான செயல்கள் பாஜக ஆதிக்கம் செலுத்தும் மேற்கு இந்தியா, வட இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் எந்தத் தண்டனையுமின்றி நடந்து வருகிறது என்பதை அனைவரும் அறிவர். சங்கப் படைகளால் அவர்களின் உண்மையான அரசமைப்புச் சட்டமாக உயர்த்திப்பிடிக்கப்படும் மனுஸ்மிருதி, இதுபோன்ற சாதிய, பாலின பாகுபாட்டின், வன்முறையின் தீவிர வடிவங்களுக்கு தேவையான சமூக அங்கீகாரத்தை வழங்குகிறது.*

*1989ன் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மீதான வன்கொடுமை தடுப்புச் சட்டம், சாதிய வன்முறையின் இந்த அதிர்ச்சியூட்டும் சமூக யதார்த்தத்தை ஒப்புக்கொண்டு, மேலும் கடுமையான சட்ட விதிகள் மூலம் அதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றது. ஆனால் பாஜகவின் எழுச்சியாலும் அதன் தாக்குதல்தன்மைமிக்க இந்துத்துவ அரசியலாலும், இந்தச் சட்டம் பெருமளவில் பயனற்றதாக்கப்பட்டுள்ளது. மேலும் அதை நீர்த்துப் போகச்செய்வதற்கும் திரும்பப் பெற வேண்டுமென்றும் கூட கூச்சல் அதிகரித்து வருகிறது. அதே நேரத்தில் மதச் சிறுபான்மை யினருக்கு எதிராக, குறிப்பாக முஸ்லிம்களுக்கு எதிராக, திட்டமிடப்பட்ட வெறுப்புக் குற்றங்கள் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளன. கும்பல் படுகொலை என்பது பரவலாக்கப்பட்ட, தனியார்மயமாக்கப்பட்ட வன்முறையின் ஒரு புதிய வடிவமாக மோடி காலகட்டத்தில் உருவெடுத்துள்ளது. அதே நேரத்தில் நீதித்துறைக்கு அப்பாற்பட்ட அரசின் பழிவாங்கல் மற்றும் பயங்கரவாத குற்றங்களின் புதிய அடையாளமாக புல்டோசர் மாறியுள்ளது. வகுப்புவாத வெறுப்பு, சாதிய அட்டூழியங்கள், பாலின வன்முறை ஆகியவை ஒரே நேரத்தில் வளர்ந்துள்ளன; ஒன்றையொன்று ஊக்குவிப்பதாகவும் உள்ளன; இருந்தபோதிலும், மேலாதிக்கமிக்க ஊடகங்கள் வகுப்புவாத வெறுப்பு குற்றங்களை குறைத்து மதிப்பிடுவதிலும் அவற்றை நியாயப்படுத்துவதிலும் பெரும்பாலும் ஆட்சியாளர்களுக்கு உடந்தையாகவே*

இருக்கின்றன.

தேர்தல்கள் நெருங்கி வருவதாலும், ஆதிவாசிகளின் வாக்குகள் மத்தியப் பிரதேசத் தேர்தலில் குறிப்பிடத்தக்க காரணியாக இருப்பதாலும், சிவராஜ் சிங் சவுகான் அரசாங்கம் அவசர அவசரமாக சரிசெய்யும் சில முயற்சிகளை தீவிரமாக மேற்கொண்டது. தஸ்மத் ராவத்தின் பாதங்களை சம்பிரதாயமாகக் கழுவி, அவருக்கு அனைத்து உதவிகளையும் செய்வதாக உறுதியளித்து, 'பாவமன்னிப்பு' கேட்கும் காணொளியை முதல்வர் சுற்றுக்கு விட்டார். அதே சமயத்தில், பிரவேஷ் சுக்லா வீட்டின் ஒரு பகுதியை இடிக்க புல்டோசர் அனுப்பப்பட்டு, அவர் காவல்துறை வாகனத்தில் ஏற்றிச் செல்லப்படுவதை மற்றொரு காணொளி காட்டுகிறது. அந்தக் காணொளி சமூக ஊடகங்களில் அதிவேகமாகப் பரவாமல் போயிருந்தாலும், தேர்தல் நெருங்காமல் இருந்திருந்தாலும் இவை எதுவும் நடந்திருக்காது என்பது தெளிவாகவே தெரிகிறது. இவ்வாறு வெளிச்சத்திற்கு வரும் இதுபோன்ற ஒவ்வொரு சம்பவத்திற்கும் இணையாக, கவனம் பெறாத பலபத்து சம்பவங்கள் உள்ளன என்பதும் தெளிவாகிறது. பயத்தில் நடுங்கும் தஸ்மத் தன்மீது ஒடுக்குமுறை நிகழ்த்திய பிரவேஷ் சுக்லாவை 'மன்னிக்கும்படி' கெஞ்சுவதைக் காணுகின்ற போதே, இந்தூரில் இரண்டு ஆதிவாசி இளைஞர்கள் கொடூரமாகத் தாக்கப்பட்டதை, சமூக ஊடகங்களில் அதிவேகமாகப் பரவிய புதிய காணொளி காட்டுகிறது.

சமூகப் பாகுபாடும் ஒடுக்குமுறையும், வெறுப்பும் வன்முறையும், இந்த மத்திய பிரதேச அத்தியாயத்தில் பிரவேஷ் சுக்லா போன்று தேர்தலில் இடர்பாடுகளை ஏற்படுத்தக் கூடிய குற்றவாளிகள் தவிர மற்ற குற்றவாளிகளுக்கு அரசியல் ஆதரவும் தண்டனையின்மையும் உள்ள அமைப்பில், மானுட கௌரவமும் உரிமைகளும் மறுக்கப்படுவது நிறுவனமயமாக்கப்பட்டுள்ள பின்னணியில், பொது சிவில் சட்டப் பிரச்சினையை நாம் எவ்வாறு காண வேண்டும்? 22வது சட்ட ஆணையம், இந்த பொது சிவில் சட்டம் என்னவாக இருக்கும் என்பது குறித்து நமக்கு எந்த ஒரு கருத்தையும் தெரிவிக்காமல், ஒரு மாத காலத்திற்குள் இது விஷயத்தில் பொதுமக்களின் கருத்தை கேட்டுள்ளது. இது விஷயத்தில் ஒரு கூர்மையான விவாதம் நடைபெற்ற பிறகு, அரசமைப்புச் சட்டத்தில் சட்டப்பூர்வமாக இதனை நடைமுறைப்படுத்தவோ அல்லது நியாயப்படுத்தவோ முடியாத, அரசு கொள்கையின் வழிகாட்டும் நெறிமுறையாக இதனை இணைத்துக் கொள்வதற்கு அரசியல் நிர்ணய சபை தீர்மானித்ததாக வரலாறு நமக்குக் கூறுகிறது. பொது சிவில் சட்டம் என்னும் கருத்து குடிமக்களுக்கு தன்விருப்பத்துடன் இருக்க வேண்டும் என்று பாபாசாகேப் அம்பேத்கர் விரும்பினார். 21வது சட்ட ஆணையம் கூட, தற்போதைய சூழலில் பொது சிவில் சட்டம் அவசியமானதோ அல்லது சாத்தியமானதோ அல்ல என்பதைக் கண்டறிந்தது. மேலும், பொது சிவில் சட்டத்திற்கு பதிலாக, அனைத்து தனிநபர் சட்டங்களின் வரம்பிற்குள் பாலின நீதியையும் சமத்துவத்தையும் உறுதிப்படுத்த பொருத்தமான சட்ட சீர்திருத்தங் களுக்கு அழைப்பு விடுத்தது. 22வது சட்ட ஆணையம் இவ்வளவு அவசரமாக இந்த விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டிய அளவுக்கு திடீரென்று என்ன நடந்தது?

பொது சிவில் சட்டம் குறித்த அதன் கருத்துகள் பற்றி அரசாங்கம் இன்னும் திட்டவட்டமான முன்மொழிவு எதையும் கொண்டு வராத நிலையில், சங்–பாஜக பரப்புரை யாளர்கள் ஏற்கனவே முஸ்லீம் சமூகத்தை இழிவு படுத்துவதில் மும்முரமாக இறங்கியுள்ளனர். மேலும் பொது சிவில் சட்டக் கருத்துக்கு எதிரான ஒவ்வொரு எதிர்ப்பையும், முஸ்லிம் சமூகத்தால் தூண்டிவிடப்பட்டதாகவோ அல்லது முஸ்லிம் சமூகத்தை திருப்திப்படுத்துவதற்கான முயற்சியா கவோ சித்தரிக்கின்றனர். யதார்த்தத்தில், மேகாலயா, நாகாலாந்து போன்ற வடகிழக்கு மாநிலங்களும் இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள பழங்குடியின சமூகங்களும் வெளிக்காட்டுமளவுக்கு அதீத அச்சத்தையும் எதிர்ப்பையும் முஸ்லிம் சமூகம் வெளிக் காட்டவில்லை. உள்துறை அமைச்சர் அமித் ஷாவும் சட்டம் குறித்த நாடாளுமன்ற நிலைக் குழு தலைவர் சுஷில் மோடியும் கிறிஸ்தவர்க ளுக்கும் வடகிழக்கு மாநிலங்களுக்கும் பொது சிவில் சட்ட வரம்பிலிருந்து விலக்கு அளிக்கப் படலாம் என்று ஏற்கனவே சுட்டிக்காட்டி யுள்ளனர். அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கிய வர்கள் பொது சிவில் சட்டம் பற்றிய யோசனையை வழிகாட்டும் நெறிமுறையாக வைத்திருந்ததற்கும், 2018 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் கூட, 21வது சட்ட ஆணையம் பொது சிவில் சட்டத்திற்கு அவசியமோ அல்லது சாத்தியமோ இல்லை என்று கண்டறிந்ததற்கும்

இதுவே துல்லியமான காரணமாகும். உண்மையில், இந்து அல்லாத பிற மதங்கள், சமூகங்களைப் போலவே, இந்துக்கள் தொடர்பான தனிநபர் சட்டத்திலும் பிராந்தியங்களுக்கு இடையே பரவலாக வேறுபடுகிற பழக்க வழக்கங்களின் பன்முகத்தன்மை உள்ளது.

ஒற்றுமை என்ற பெயரில் ஒருமைத்துவத்தை திணிக்க முயற்சிப்பதற்கு மாறாக, பன்மைத்துவத்துடன் சமத்துவமும் இயைந்து இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய 21வது சட்ட ஆணையத்தின் செயல் சரியானதாகும். ஆச்சரியப்படும் விதமாக, முன்னாள் ஆர்எஸ்எஸ் தலைவர் கோல்வால்கர் கூட, இந்தியா போன்ற பரந்த, பன்முகத்தன்மை கொண்ட நாட்டில் பொது சிவில் சட்டத்தை திணிப்பது என்னும் கருத்துக்கு எதிராக திட்டவட்டமாக எச்சரித்திருந்தார். 1971ல் ஆர்எஸ்எஸ் ஊதுகுழலான ஆர்கனைசரின் ஆசிரியர் கேஆர் மல்கானிக்கு அளித்த நீண்ட நேர்காணலில் ஒருமைத்துவத்தைக் காட்டிலும், நல்லிணக்கமே இந்தியாவின் ஒற்றுமைக்கு அவசியம் என்று கோல்வால்கர் சுட்டிக்காட்டினார். இருப்பினும், இன்றைய கால நெருக்கடி தரும் பிரச்சனைகளில் இருந்து மக்களின் கவனத்தைத் திசைதிருப்பவும், இந்தியாவை வகுப்புவாத துருவச் சேர்க்கையின் அடிப்படையில் பிளவுபடுத்தவும் பொது சிவில் சட்டம் சிறந்த நடவடிக்கையாக இருக்கும் என்று நம்புவதாலும், அது இன்று எந்த நிதானத்தையும் கடைபிடிக்க வேண்டிய தேவையில்லை என்னும் நிலையை எட்டியுள்ளதாலும், தனது சொந்த தத்துவ, நிர்வாக முன்னோடிகளால் அறிவுறுத்தப்பட்ட எச்சரிக்கையைக் கைவிடுவதில் மோடி அரசாங்கம் அவசரம் காட்டுகிறது.

சமத்துவத்தையும் நீதியையும் உறுதி செய்வதற்கான சட்ட சீர்திருத்தங்கள் ஒரு தொடர்ச்சியான நிகழ்ச்சி நிரலாகும். மேலும் அரசமைப்புச் சட்டத்தின் 44 வது பிரிவின் வழிகாட்டுதல்படி, அனைத்து சமூகங்களிலும் உள்ள பெண்களுக்கு பாலின நீதியை உறுதி செய்யும் சட்டங்களை உருவாக்கும் திசையில் அரசு தொடர்ந்து செயல்பட வேண்டும். மேலும் சம்பந்தப்பட்ட அனைவரின் கூட்டுப் பங்கேற்பும் இசைவும் இல்லாமல், பிரிவு 44ஐ வெற்றிடத்தில் செயல்படுத்த முடியாது. மேலும், மோடி அரசாங்கம், அரசின் கொள்கைகளுக்கு வழிகாட்டும் நெறிமுறைகளை விரைந்து அமல்படுத்த வேண்டுமென விரும்பினால், அதற்கிணையான அனைவருக்கும் வேலைக்கான உரிமை, வாழ்வாதாரத்திற்கான உத்தரவாதம், வருமான சமத்துவமின்மையையும் செல்வம் மற்றும் உற்பத்திச் சாதனங்கள் சிலரின் கைகளில் குவிதலையும் குறைப்பதை அரசு உறுதி செய்ய வேண்டுமென வலியுறுத்தும் அரசமைப்புச் சட்டம் தொடர்புடைய பிரிவு 36 முதல் 51 வரையிலான அடிப்படை வழிகாட்டுதல்களை புறக்கணித்துவிட்டு அது பிரிவு 44 இல் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட கவனம் செலுத்த முடியாது.

ஆயினும்கூட, பொது சிவில் சட்டத்தை அமல்படுத்த நினைக்கும் பாஜகவின் தற்போதைய நடவடிக்கைகள், பாலின நீதியை உறுதிப்படுத்துவது அல்லது அரசின் கொள்கைகளுக்கு வழிகாட்டும் நெறிமுறைகளின் உணர்வுகளோடு தொடர்புடையது என்று நாம் நம்ப முடியாது. உண்மையில், பொது சிவில் சட்ட நிகழ்ச்சி நிரலை முன்னிறுத்துவது, வகுப்புவாத துருவச் சேர்க்கையை ஏற்படுத்தவும் முஸ்லிம்களை தீயவர்களாக சித்தரிக்கவுமான பரந்த திட்டத்தின் ஒரு பகுதியாகும். 'காதல் ஜிஹாத்' என்ற தீய கட்டுக்கதையுடன், மக்கள் தொகை வளர்ச்சியில் பலதார மணத்தின் விளைவுகள் பற்றிய மோடியின் இழிவான, அபத்தமிக்க தவறான கூற்றுகளால் உருவகப்படுத்தப்பட்ட 'இந்துக்களை விட எண்ணிக்கையில் மிஞ்சும் முஸ்லிம்கள்' என்ற அபத்தமான கதையாடலுக்கு ஏற்ப அப்பட்டமான வேண்டுகோளுடன் பொது சிவில் சட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. எதிர்க்கட்சிகள் இந்த திட்டத்தை முறியடித்து, வாழ்வதற்கான நிதிச்செலவின் அதிகரிப்பு என்னும் நெருக்கடி, வேலையின்மை போன்ற பற்றி எரியும் பிரச்சினைகளில் கவனம் செலுத்த வேண்டும். மேலும் மனுஸ்மிருதி நெறிமுறையின் சமூக ஒடுக்குமுறையை, வன்முறையை பொதுவான தாக்கும் ஒவ்வொரு முயற்சிக்கும் எதிராக, நவீன மதச்சார்பற்ற ஜனநாயக இந்தியா என்னும் அரசமைப்புச் சட்டத்தின் நோக்கத்தை பாதுகாக்க வேண்டும். பாலின நீதியும் சமத்துவமும் வேண்டும்; பொது சிவில் சட்டம் என்ற பெயரில் வகுப்புவாத துருவச் சேர்க்கையை ஏற்படுத்தும், முஸ்லிம்களை தீயவர்களாக சித்தரிக்கும் அரசியல் வேண்டாம்!

எம்எல் அப்டேட் தலையங்கம் 12–18 ஜூலை 2023

**தமிழாக்கம் – செந்தில்**

# கட்டுமான தொழிலாளர் சங்கத்தை போராட்ட இயக்கமாக வளர்த்தெடுக்க உறுதி பூண்ட தமிழ்நாடு ஜனநாயக கட்டுமான தொழிலாளர் சங்கத்தின் [AICWF] 4வது மாநில மாநாடு!

***2023***, *ஜூலை 7 அன்று கன்னியாகுமரியில் தோழர்கள் என்.கே நடராஜன் – பொன்ராஜ் நினைவரங்கில், தோழர் அந்தோணி முத்து தலைமையில் தமிழ்நாடு ஜனநாயக கட்டுமான தொழிலாளர் சங்கத்தின் 4வது மாநில மாநாடு பெருந்திரள் தொழிலாளர் பங்கேற்பு மாநாடாக நடைபெற்றது. மாநாட்டு நுழைவு வாயிலில் தோழர் சுசிலா கொடியேற்றிய பின்பு, தியாகிகள் ஸ்தூபிக்கு தோழர்கள் அஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து, தோல் மற்றும் தோல் பொருள் ஜனநாயக தொழிலாளர் சங்கத்தின் தலைவரும் ஏஐசிசிடியு மாநிலத் துணைத் தலைவருமான தோழர் சுகுந்தன் திருவுருவப்படத்திற்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. அதன் பின் முறையாக மாநாடு துவங்கியது. தோழர்கள் கார்மல், பிலோமினா, ராஜன், சிவராஜ், வெங்கடேசன், வேல்முருகன், சௌந்தர்ராஜன், இளையராஜா, ஆபிரகாம் ஆகியோர் முன்னிலை வகிக்க தோழர் சுசீலா வரவேற்புரை நிகழ்த்தினார்.*

*மாநாட்டைத் துவக்கி வைத்து அகில இந்திய கட்டுமான தொழிலாளர் கூட்டமைப்பின் அகில இந்திய பொதுச் செயலாளர் தோழர் எஸ்.கே. சர்மா உரையாற்றினார். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட அனைத்திந்திய விவசாய கிராமப்புற தொழிலாளர் சங்கத் தலைவரும் பீகார் சட்டமன்ற உறுப்பினருமான தோழர் வீரேந்திர குப்தா மாநாட்டை வாழ்த்திப் பேசினார். மாநாட்டு அறிக்கையை மாநில பொதுச் செயலாளர் தோழர் இரணியப்பன் முன் வைத்தார். அறிக்கை அவையால் ஏக மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. கலைந்து செல்லும் மாநிலக் கமிட்டி சார்பாக முன்வைக்கப்பட்ட 31 பேர் கொண்ட மாநில குழுவையும் நிர்வாகிகள் பட்டியலையும் மாநாடு ஏக மனதாக ஏற்றுக் கொண்டது. மாநாட்டின் நிறைவாக பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. மாநாட்டில் அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழக மாநில அமைப்பாளர் தோழர் ரேவதி, புரட்சிகர இளைஞர் கழக மாநிலத் தலைவர் தோழர் சுந்தர்ராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர். நிறைவாக மாநாட்டை வாழ்த்தி இககமாலெ மாநிலச் செயலாளர் தோழர் பழ. ஆசைத்தம்பி உரையாற்றினார்.* ❑










# புரட்சிகர கட்டுமானத் தொழிலாளர் இயக்கத்தை நோக்கி...

## அகில இந்திய கட்டுமான தொழிலாளர் கூட்டமைப்பு 4வது தேசிய மாநாடு











நாட்டின் தென்கோடியிலுள்ள கன்னியா குமரியில் 2023 ஜூலை 8-9 தேதிகளில் இந்தியா முழுவதுமிருந்து பிரதிநிதிகள் வந்து கலந்து கொண்ட மாநாடாக, அகில இந்திய கட்டுமான தொழிலாளர் கூட்டமைப்பின் 4வது தேசிய மாநாடு அமைந்தது. புதுச்சேரி, கேரளா, கர்நாடகா, ஆந்திரப்பிரதேசம், ஒடிசா, மேற்கு வங்கம், அசாம், கார்பி, குஜராத், உத்தரப்பிரதேசம், பீகார், ஜார்கண்ட், டெல்லி, ராஜஸ்தான், தமிழ்நாடு என இந்தியா முழுவதுமிருந்து பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். ஜூலை 8 துவக்க நாளில் மாநாட்டு அரங்க நுழைவு வாயிலில் AICWF கொடியை தேசியத் தலைவர் தோழர் சோ.பாலசுப்பிரமணியன் ஏற்றி வைத்தார். தோழர் சுகுந்தன் உள்ளிட்ட வர்க்க போரில் உயிர்நீத்த தியாகிகளை நினைவு கூர்ந்து தியாகிகள் ஸ்தூபிக்கு மலர் அஞ்சலி செலுத்திய பின் மாநாடு துவங்கியது.

முதலில் நடைபெற்ற பொது அமர்வில் இந்திய கட்டுமான தொழிலாளர் கூட்டமைப்பு(சிஐடியு), ஏஐடியுசி கட்டிட தொழிலாளர் சங்கம், தொழிலாளர் விடுதலை முன்னணி (எல்எல்எஃப்) ஆகியவற்றின் தலைவர்கள் பங்கேற்று கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர். மாநாட்டை துவக்கி வைத்து ஏஐசிசிடியு அகில இந்தியத் தலைவர் தோழர் வீ.சங்கர் உரையாற்றினார். அதைத் தொடர்ந்து புரட்சிகர கட்டுமான தொழிலாளர் இயக்கத்தை கட்டி எழுப்புவோம் என்ற சிறு புத்தகம் ஆங்கிலத்திலும் இந்தியிலும் வெளியிடப்பட்டது. கட்டுமான தொழிலாளர் சங்க கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் தோழர் எஸ்.கே.சர்மா புத்தகத்தை வெளியிட ஏஐசிசிடியு அகில இந்திய பொதுச் செயலாளர் தோழர் ராஜீவ் டிம்ரி பெற்றுக் கொண்டார். பின்னர் CWFI - CITU மாநிலத் தலைவர் தோழர் கே.பி.பெருமாள், ஏஐடியுசி கட்டிடத் தொழிலாளர் சங்க மாநில பொதுச் செயலாளர் தோழர் என்.செல்வராஜ், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் வாரிய உறுப்பினரும் தொழிலாளர் விடுதலை முன்னணியின் மாநில அமைப்பாளருமான தோழர் பேரறிவாளன் ஆகியோர் கருத்துரை வழங்கினர். மாநாட்டுக்கு

வந்திருந்து சிறப்பித்த விருந்தினர்களுக்கு நினைவு பரிசு வழங்கப்பட்டது.

அடுத்து துவங்கிய பிரதிநிதிகள் அமர்வில் தோழர் எஸ்.கே. சர்மா மாநாட்டு அறிக்கையை முன் வைத்தார். அறிக்கை மீது பிரதிநிதிகள் தங்கள் கருத்துக்களை பதிவு செய்தனர். ஜூலை 9ஆம் தேதியும் பிரதிநிதிகள் விவாதம் தொடர்ந்தது. இறுதியாக பொதுச் செயலாளர் தோழர் சர்மா தொகுப்புரையாற்றினார். அறிக்கையை மாநாடு ஏக மனதாக ஏற்றுக் கொண்டது. அகில இந்திய செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் மாநாட்டில் ஏக மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அகில இந்திய தலைவராக தோழர் சோ.பாலசுப்பிரமணியனும் பொதுச் செயலாளராக தோழர் எஸ்.கே.சர்மாவும் மீண்டும் தேர்ந்தெடுக் கப்பட்டனர். மாநாட்டை வாழ்த்தி இகக(மாலெ) தமிழ் மாநிலச் செயலாளர் தோழர் பழ.ஆசைத்தம்பி பேசினார். இறுதியாக மாநாட்டை வாழ்த்தி ஏஐசிசிடியு அகில இந்திய பொதுச் செயலாளர் தோழர் ராஜீவ் டிம்ரி உரையாற்றினார்.

மாநாட்டில் இறுதி நிகழ்ச்சியாக கன்னியா குமரியில் பல்வேறு போராட்டங்களில் சிறை சென்ற தோழர்களுக்கும்,தஞ்சையில் போராட்டத்தில் சிறை சென்ற தோழர்களுக்கும் பாராட்டு தெரிவிக்கப்பட்டது. மூன்று நாள் மாநாட்டை சிறப்பாக நடத்த அயராது உழைத்த கன்னியா குமரி மாவட்ட தோழர்களுக்கும் தொண்டர்களுக்கும் கர ஒலி எழுப்பி வாழ்த்துக்களையும் மகிழ்ச்சியையும் தெரிவித்தது. 2024 தேர்தலில் மோடி ஆட்சியை தோற்கடிப்போம்! புரட்சிகர கட்டுமானத் தொழிலாளர் இயக்கத்தை கட்டி எழுப்பவோம்! என்ற முழக்கங்களுடன் மாநாடு நிறைவு பெற்றது. ❑

# நாங்கள் தமிழக மக்கள் அமைதியை விரும்புபவர்கள், அவர்கள் சகோதரத்துவத்தை நேசிப்பவர்கள் என்று சொன்னோம்

### பீகார் சட்டமன்ற உறுப்பினர் தோழர் வீரேந்திர குப்தா பேசியது




அனைத்திந்திய விவசாய கிராமப்புற தொழிலாளர் சங்கத்தின் சார்பில் கட்டுமான தொழிலாளர்களின் மாநாட்டுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். மோடி ஆட்சி இ-ஸ்ரம் என்ற திட்டத்தை கொண்டு வந்துள்ளது. அதன் நோக்கம் நலவாரியத்தில் கையிருப்பில் உள்ள பணத்தை எடுத்து ஊக வணிகத்தில் முதலீடு செய்வதாக உள்ளது. எப்படி விவசாயிகள் விரோத 3 வேளாண் சட்டங்களுக்கு எதிராக டெல்லி எல்லையில் போராடி விவசாயிகள் அந்த சட்டங்களை திரும்பப் பெற வைத்தார்களோ அதைப்போல அதிலிருந்து பாடங்களை கற்றுக் கொண்டு நாம் செயல்பட வேண்டும். ஒன்றிய மோடி அரசு திட்டமிட்ட விஷம, வெறுப்பு பிரச்சாரத்தில் ஈடுபடுகிறது. தமிழ்நாட்டில் இந்தி பேசும் மக்கள் தாக்கப்படுவதாக வதந்தி பரப்பினார்கள். பீகாரில் உள்ள இகக(மாலெ) சட்டமன்ற உறுப்பினர்கள், வதந்தியை நம்ப வேண்டாம் என்றும் வதந்தியை பரப்புவோர்களை அம்பலப்படுத்தியும் பிரச்சாரம் செய்தோம். நாங்கள் தமிழக மக்கள் அமைதியை விரும்புபவர்கள் என்றும் அவர்கள் சகோதரத்துவத்தை நேசிப்பவர்கள் என்றும் சொன்னோம். இந்த காலகட்டத்தில் ஆட்சியாளர்கள் அனைத்து பிரிவு மக்கள் மீதும் தாக்குதலை கொடுத்துள்ளனர் நாம் அனைவரும் ஒன்றிணைந்து இந்த ஆட்சியை தோற்கடிப்போம். ❑

# மோடி அரசின் சமூகப் பாதுகாப்புச் சட்டத்துக்கு எதிரான தீவிரமான போராட்ட இயக்கம் வேண்டும்

## அகில இந்திய மாநாட்டு பொது அமர்வில் ஏஐசிசிடியு தேசியத் தலைவர் தோழர் வீ.சங்கர் ஆற்றிய உரையின் சுருக்கம்




இன்று மணிப்பூர் மாநிலம் பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. மோடி ஆட்சியின் பிளவு படுத்தும் கொள்கைகளின் விளைவே அது. இந்தியாவில் முதலில் குடியுரிமைத் திருத்த சட்டத்திற்கு எதிராக சாகின்பாக் போராட்டத்தை நாடு சந்தித்தது. இஸ்லாமிய மக்களும் ஜனநாயக இயக்கங்களும் போராட்டத்தில் கலந்து கொண்டனர். அதற்கடுத்து விவசாயிகள் விரோத வேளாண் சட்ட திருத்தங்களுக்கு எதிராக டெல்லி எல்லையிலே அமர்ந்து மிகப் பெரிய போராட்டத்தை விவசாயிகள் நடத்தினார்கள். ஓராண்டுக்கும் மேலாக நடைபெற்ற அந்த போராட்டத்தின் விளைவாக மோடி அரசு வேளாண் திருத்த சட்டங்களை திரும்ப பெற வேண்டிய நிலை ஏற்பட்டது. அதேபோல, தொழிலாளர்கள் விரோத 4 சட்டத் தொகுப்பு களுக்கு எதிராக தொழிலாளர்களும் வேறு வேறு வடிவங்களிலான போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். 4 சட்டத் தொகுப்புகளும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு சட்டமாக் கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் தொழிலாளர் வர்க்கத்திடம் இருந்து கடுமையான எதிர் விளைவுகள் வரும் என்ற காரணத்தால் மோடி அரசாங்கம் அதை நிறுத்தி வைத்துள்ளது. சிலர் சொல்கிறார்கள் நாட்டில் ஏற்கனவே இருக்கக் கூடிய தொழிலாளர் நலச் சட்டங்கள் அமைப்பாக் கப்பட்ட தொழிலாளர்களுக்கு மட்டுமானதாக இருக்கின்றது. அமைப்புசாரா தொழிலாளர் களுக்கு அவை உதவக்கூடியதாக இல்லை. வந்திருக்கக்கூடிய சட்டத் தொகுப்புகள் அமைப்புசாராத் தொழிலாளர் நலனிலிருந்து கொண்டு வரப்பட்டவை என்று சொல்கிறார்கள். முற்றிலும் தவறானது. போராடிப் பெற்ற பல்வேறு உரிமைகளை இந்த சட்டத் தொகுப்பு கள் பறிக்கின்றன. சர்வதேச அளவில் உயிர்த் தியாகம் செய்து பல்வேறு போராட்டங்கள் நடத்தி பெறப்பட்டது 8 மணி நேர வேலை உரிமை. இன்றைக்கு அந்த உரிமை பறிபோகும் சூழல் உள்ளது. இந்த சட்டத் தொகுப்புகள் தொழிலாளர் நலனிலிருந்து கொண்டு வரப்பட்டது அல்ல. ஆகவேதான், நாம் இவற்றை முதலாளிகள் நல சட்டத் தொகுப்புகள் என்று குறிப்பிடுகிறோம். இந்த சட்டத் தொகுப்புகள் வேலை அளிப்ப வருக்கு பல்வேறு சலுகைகளை வழங்குகின்றன. அதிலும் குறிப்பாக சமூக பாதுகாப்புச் சட்ட தொகுப்பு, இந்த சட்டம் தான் முக்கியமாக அமைப்பு சாராத் தொழிலாளர் களுக்கு, அதிலும் குறிப்பாக கட்டுமான தொழிலாளர்களை

பெரிதும் பாதிக்கக்கூடிய சட்டத்தொகுப்பாகும். இந்த சட்டத் தொகுப்பில் தொழிலாளர்களுக்கான பாதுகாப்பு எதுவும் இல்லை. அதற்குப் பதிலாக இதுவும் வேலை அளிப்பவரின் பாதுகாப்புக்கான சட்டத் தொகுப் பாகவே உள்ளது. தொழிலாளர் ஈட்டுறுதி, வருங்கால வைப்பு நிதி போன்ற சட்டங்கள் எல்லாம் சமூகப் பாதுகாப்பு சட்டங்களாக இந்த நாட்டிலே கொண்டுவரப்பட்டன. தொழிலா ளர்கள் அவர்கள் செலுத்துகிற பிரீமியம் தொகைக்கு தகுந்தாற்போல் புதிய சட்டத் தொகுப்புப்படி பயன்கள் கிடைக்கும். அப்படி என்றால் வேலை அளிப்பவர்கள் முழுவதுமாக தங்களுடைய பொறுப்பில் இருந்து விடுவிக்கப் பட்டுள்ளனர். இது ஒரு காப்பீட்டுத் திட்டம் போல கொண்டு வரப்பட்டுள்ளது. தொழிலாளி அதிகமாக பணம் செலுத்தினால் அதிக பயன்கள், குறைவாக பணம் செலுத்தினால் குறைவான பயன்கள் என்ற நிலையை உருவாக்குகிறது. தொழிலாளர் நலச் சட்டங்களிலேயே சிறந்த சட்டமாக பீடித் தொழிலாளர் நலச் சட்டம் கருதப்படுகிறது. அச்சட்டத்தின் படி தொழிலாளர் களுக்கு வீடு கூட கட்டிக் கொடுக்கப்பட்டது. ஆனால், இன்றைக்கு கட்டுமானத் தொழிலாளர் களுக்கு வீடு கட்டுவதற்கு கடன் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஒருவர் வீடு கட்ட கடன் பெற வேண்டுமானால் அவரிடம் வீடு கட்டுவதற்கான இடம் இருக்க வேண்டும். கட்டுமானத் தொழிலாளியிடம் வீடு கட்டுவதற் கான இடம் கிடையாது. கட்டுமான தொழிலா ளர்கள்தான் பெரிய பெரிய அடுக்குமாடி குடியிருப்புகளைக் கட்டுகிறார்கள். பெரிய பெரிய நீர் தேக்கங்களைக் கட்டுகிறார்கள். பாலங்களை கட்டுகிறார்கள். ஆனால், அவர்கள் வாழ அவர்களுக்கு ஒரு அறை கிடையாது என்ற நிலைதான் உள்ளது. ஆகவே, கட்டுமானத் தொழிலாளர்களுக்கு குடியிருப்பு என்பது முக்கியமான கோரிக்கையாகும். கட்டுமானத் தொழிலாளர்களின் ஊதியம் என்பது ஒரு மிகப்பெரிய பிரச்சனையாகும். பல்வேறு உச்ச நீதிமன்ற தீர்ப்புகளுக்குப் பிறகு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், இன்றைக்கு குறைந்தபட்ச ஊதியத்தை அமலாக்கச் சொல்லி கேட்கும் போது, மோடி அரசாங்கம் புதிதாக தரைமட்டக் கூலி என்பதைக் கொண்டு வருகிறது. அமைப்புசாராத் தொழிலாளிக்கு மாதம் ரூபாய் 4500 தரைமட்டக் கூலியாக நிர்ணயிக்கப்படுகிறது. அதற்குப் பிறகு எதிர்ப்பு குரல்கள் வந்தபின் பரிசீலிக்க ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு, அந்தக் கமிட்டி குறைந்தபட்ச ஊதியமாக ரூ.10,000 என்று அறிவித்தது. இப்போது மோடி ஆட்சி அந்த கமிட்டியைக் கலைத்து விட்டு புதிதாக ஒரு கமிட்டியை குறைந்தபட்சக் கூலியை நிர்ணயம் செய்யச் சொல்லிப் போட்டுள்ளது. பல தொழில்களில் எப்போதுமே சந்தைக் கூலியை விட நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் என்பது குறைவாக இருக்கும். ஆனால், கட்டுமானத் தொழிலை பொறுத்தவரை நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்சக் கூலியை விட சந்தைக் கூலி அதிகமானதாக இருக்கும். கேரளாவில் வலுவான தொழிற்சங்க இயக்கம் இருக்கின்ற காரணத் தினால் அங்கே கூலி நிலைமைகள் மேம்பட்டதாக உள்ளன. தொழிற்சங்க இயக்கத்தால் அதைச் செய்ய முடிந்துள்ளது. ஆகவே, இந்த மாநாட்டின் முக்கிய தீர்மானமாக மோடி அரசின் சமூகப் பாதுகாப்புச் சட்டத்துக்கு எதிரான தீவிரமான போராட்ட இயக்கம் என்பது இருக்க வேண்டும்.

## பெங்களூரு எதிர்க்கட்சிகளின் கூட்டம் சொல்லும் செய்தி

எதிர்க்கட்சிகளின் கூட்டம் வெற்றிகரமாக பெங்களூருவில் நடந்து முடிந்துள்ளது. மோடி ஆட்சியை வீழ்த்துவதற்காக 'இந்தியா' என்று சுருக்கமாக அழைக்கப்படும் கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது. நடுக்கத்திற்குள்ளாகியுள்ள மோடி முகாம் 'இந்தியா'வை பாரதத்திற்கு எதிராக நிறுத்தி, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை அவமதிக்கிறது. 'இந்தியா, அதாவது பாரதம், மாநிலங்களின் ஒன்றியமாகும்' என்று அரசியலமைப்புச் சட்டத்தின் முதல் சரத்து கூறுகிறது. மோடி அரசு, இந்திய மாநிலங்களை ஒன்றிய அரசின் கீழ் உள்ள காலனிகளாக மாற்றிட முயற்சிக்கிறது. பாட்னா மற்றும் பெங்களூருவின் செய்திகள் நாடு முழுவதும் மூலை முடுக்குகளிலும் உள்ள மக்களிடம் எடுத்துச் செல்லப்பட வேண்டும். வரவிருக்கும் தேர்தல்கள் பாஜகவைத் தோற்கடிக்கும் மக்கள் இயக்கங்களாக்கப்பட வேண்டும். போர் துவங்கிவிட்டது ! நாம் போராடுவோம் ! நாம் வெற்றி பெறுவோம் !

# நாம் எப்போதும் செய்கிற வேலையை மாற்றி அமைத்து மறு திசைவழிப்படுத்த வேண்டும்

**ஏஐசிசிடியு அகில இந்திய பொதுச் செயலாளர் தோழர் ராஜீவ் டிம்ரி ஆற்றிய உரை**




கட்டுமானத் தொழிலாளர்கள் சந்திக்கும் இன்றைய நிலை பற்றி பொதுச் செயலாளர் அறிக்கை விவரமாக சொல்லி உள்ளது. அறிக்கை யின் மீது பிரதிநிதிகளும் விவாதம் செய்துள் ளீர்கள்.

நாம் சரியான நேரத்தில் இந்த மாநாட்டை கட்டமைத்திருக்கிறோம். இந்த சூழல், தாக்குத லுக்கு எதிராக ஒரு அவசர பதில் வினையைக் கோருகிறது. ஆகவே தான், நாம் புதிய திசைவழி பற்றி பேசுகிறோம். மோடி அரசு தொழி லாளர்களின் எல்லா உரிமைகளையும் பறிக்கிறது. அவர்கள் தெளிவாக ஒரு செய்தியைச் சொல் கிறார்கள். 1996ஆம் ஆண்டு கட்டுமான தொழிலாளர் சட்டத்தை இல்லாது ஒழிப்போம் என்பதுதான் அந்த செய்தி. 2024 நாடாளுமன்ற தேர்தல் அதிமுக்கியத்துவம் வாய்ந்த தேர்தல். ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை வரும் நாடாளுமன்றத் தேர்தலாக இந்தத் தேர்தலைப் பார்க்க முடியாது, கூடாது. மோடி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் எதுவும் மிச்சம் இருக்காது. ஆகவேதான், இது 'செய் அல்லது செத்துமடி' என்பதற்கான சூழலாக இருக்கிறது. பெருந்தொற்று காலத்தில் கட்டுமானத் தொழி லாளர்கள் கடும் துன்ப, துயரங்களை அனுபவித் தார்கள். புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் சொல்லொண்ணாத் துயரத்திற்கு உள்ளானார்கள். இந்தப் பின்னணியில்தான் நமது தொழிற்சங்க வேலையை மறு திசைவழிப் படுத்த வேண்டும் எனச் சொல்கிறோம். நல வாரியத்தை மையமாகக் கொண்ட வேலையை மாற்றி அமைக்க வேண்டும். நமது முழக்கம் "சங்கம் முதலில், வாரியம் இரண்டாம் பட்சம்" என்பதாக இருக்கிறது. பல வகை தொழிலாளர்களுக்கான வாரியம் உள்ளது. புதிய சமூகப் பாதுகாப்பு பற்றி அரசாங்கம் பேசி வருகிறது. அது என்ன புதிய சமூக பாதுகாப்பு? இஸ்ரம் போர்ட்டலா? அல்லது எல்லா தொழிலுக்கும் பொதுவான வாரியமா? என்னவென்று தெரியவில்லை. உரிமைகள் பறிக்கப்பட்டு கொண்டிருக்கும் போது, பழைய பாணியில் நாம் நமது தொழிற்சங்க வேலைகளைத் தொடர முடியாது. நாம் நமது உரிமைகளை மீட்டெடுக்க வேண்டும். நாம் சந்திக்கக்கூடிய பிரச்சனை என்ன? நமது போராட்டம் எப்படி இருக்க வேண்டும்? யாரைக் கூர்மைப்படுத்தி இருக்க வேண்டும்?

நமது போராட்டம் கட்டுமான நிறுவனங் கள் - அரசாங்கக் கூட்டிற்கு எதிரானதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு மாநிலத்திலும் பொருத்த மான பிரத்தியேக பிரச்சனை மீது கவனம் செலுத்த வேண்டும். அந்தந்த மாநிலங்கள் அதற்கேற்ற வியூகங்களை வகுத்துக் கொள்ள வேண்டும். நாம் எப்போதும் செய்கிற வேலையை மாற்றி அமைத்து மறு திசைவழிப் படுத்த வேண்டும். இது போன்ற சூழல்கள் எப்போதுமே சவால்களையும் வாய்ப்புகளையும் கொண்டு வரும். ஒப்பீட்டளவில் நம்மிடம் ஆற்றலும் திறமையும் இருப்பதால் நம்மால் வலுவான கட்டுமானத் தொழிலாளர்களின்

கூட்டமைப்பை உருவாக்க முடியும்.

நாம் புலம்பெயர்ந்த தொழிலாளர்களை அணுகுவதற்கு என்று சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். இந்த மாநாட்டில் அவர்கள் பிரச்சினைக்கு சிறப்பு செல் (குழு) உருவாக்குவது பற்றி முடிவு செய்யலாம். டெல்லி நோக்கி புலம் பெயர்வது என்பது எப்போதும் இருக்கின்ற அதே நேரத்தில், தெற்கு நோக்கி வருவதும் அதிகரித்த அளவில் நடைபெறுகிறது. புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பிரச்சனையை அணுக சில குறிப்பிட்ட தோழர்களை அதற்கு பொறுப்பாக்கலாம். புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கும் உள்ளூர் மக்களுக்கும் திட்டமிட்டு மோதல் உருவாக்கப்படுகிறது. தமிழ்நாட்டின் போலி வீடியோ அதைத்தான் காட்டியது. மோடி ஆட்சியை அகற்ற வேண்டுமானால் கட்டுமானத் தொழிலாளர்கள் மத்தியில் நாம் அரசியல் பிரச்சாரத்தைத் திறம்பட நடத்த வேண்டும். “நல்ல காலம்” முதல் “அமுத காலம்” வரையிலான அர்த்தமற்ற பாசாங்கு பேச்சுக்களை நாம் அம்பலப்படுத்த வேண்டும். நமக்கு நன்கு கட்டமைக்கப்பட்ட வலைப் பின்னல் கொண்ட அமைப்பு இருந்தால்தான் நம்முடைய புரட்சிகர கருத்துக்களை திறம்பட எடுத்துச் செல்ல முடியும். அதே போல் பெரும் எண்ணிக்கையிலான தொழிலாளர்களை நம் அமைப்புக்கு கொண்டு வருவதும் முக்கியமானது. அப்போது மட்டுமே நமது நோக்கங்களை நிறைவேற்ற முடியும்.

நமது அமைப்பு பலமாக மாற வேண்டும். அமைப்பு உறுப்பினர் எண்ணிக்கையை ஆதாரமாகக் கொண்டது. இறுதி ஆராய்ச்சியில் எண்கள் முக்கியமானவை. எந்த அளவுக்கு நாம் இறங்கி களத்தில் வேலை செய்கிறோம் என்பதன் வெளிப்பாடு எண்ணிக்கை. அடுத்தது, அரசியல் படுத்துதல் என்பது நமது முக்கிய அம்சமாக இருக்கும். நாம் சேர்க்கும் உறுப்பினர்களில் இருந்து ஊழியர்களை கண்டறிய வேண்டும். வளர்க்க வேண்டும். உறுப்பினர் சேர்ப்போடு நின்றுவிடாமல், வருடா வருடம் தொழிலாளர்கள் உடனான தொடர்புகளைப் புதுப்பிக்கவும் வேண்டும். சாதாரண கட்டுமானத் தொழிலாளி அரசியல்படுத்தப்பட்டு ஒரு தொழிற்சங்க ஊழியராக வளர்வதை நாம் உறுதி செய்ய வேண்டும். அதோடு பெரும் எண்ணிக்கையில் தொழிலாளர்களை அமைப்புக்கு கொண்டு வர வேண்டும். நமது உறுப்பினர் எண்ணிக்கை ஒரு லட்சத்தை தாண்டவில்லை. இப்போதுள்ள சூழலை எதிர்கொள்ள மிகப்பெரும் உறுப்பினர் எண்ணிக்கை, வலுவான அமைப்பு கட்டமைப்பு இரண்டும் தேவை. காலத்தின் தேவைக்கு ஈடு கொடுக்க எழுந்து நிற்க இந்த மாநாடு வழிகாட்டும் என நம்புகிறேன்.

# கட்டுமானத் தொழிலாளர் நலச் சட்டம் இந்தியாவில் வர தமிழகம் முன்னோடி மாநிலமாக பங்காற்றியிருக்கிறது.

## கட்டுமான தொழிலாளர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் சர்மா பேசியது:




*ம*த்திய மோடி அரசு இந்திய தொழிலாளர் வர்க்கத்தின் மீது கடும் தாக்குதலைத் தொடுத்து வருகிறது. தொழிலாளர் வர்க்கத்தின் மீதான போர் என்றே சொல்லலாம். நான்கு சட்டத் தொகுப்புகள் மூலம் போராடி பெற்ற உரிமைகள் பறிக்கப்படுகின்றன. கட்டுமானத் தொழிலாளர் நலச் சட்டம் இந்தியாவில் வர தமிழகம் முன்னோடி மாநிலமாக பங்காற்றியிருக்கிறது. அந்த முயற்சியின் காரணமாகவே தேசிய பிரச்சாரக் குழு உருவாக்கப்பட்டு, டெல்லியில் கருத்தரங்கமும் நடத்தப்பட்டது. தொடர் போராட்ட இயக்கத்தின் விளைவாக 1996இல் கட்டுமான தொழிலாளர் நலச் சட்டம் கொண்டு வரப்பட்டு அதன்படி மாநிலங்களில் தொழிலாளர் நல வாரியங்கள் உருவாக்கப்பட்டன. இந்த அயராத முயற்சிக்காக தமிழக தோழர்களுக்கு எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்று போராடி பெற்ற உரிமைகள் ஒவ்வொன்றாக பறிக்கப்படுகின்றன. நலவாரியத்தில் இருப்பில் உள்ள பணத்தை அதானி, அம்பானிக்கு கொடுக்க முனைகிறார்கள். இன்னொரு பக்கம் சாதியைச் சொல்லி, மதத்தைச் சொல்லி தொழிலாளர் வர்க்கத்தைப் பிரித்தாளும் சூழ்ச்சிகளிலும் ஈடுபடுகிறார்கள். இந்தியா முழுவதும் 10 அந்நிய பகாசுர நிறுவனங்கள் கட்டுமானத் தொழிலில் இறங்கி இருக்கின்றனர். பெரும் கட்டுமான நிறுவனத்தில் பணியாற்றும் தொழிலாளர்களை நாம் அமைப்பாக்க வேண்டும். வெறும் பயனாளிகள் என்ற நிலையிலிருந்து மாற்றி கட்டுமானத் தொழிலாளர்களை போர்க்குணமிக்க போராட்டத்தில் திரட்ட வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. நலவாரிய வேலைகளை மையப்படுத்திய சங்கம் என்பதிலிருந்து வர்க்கப் போராட்டத்தை மையப்படுத்திய சங்கமாக நமது வேலையை மறு திசைவழிப்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. கட்டுமானத் தொழிலாளர்களாகிய நாம் தான் இந்த நாட்டையே கட்டி எழுப்புகிறோம். ஆனால், நாம் ஆட்சியாளர்களால் புறக்கணிக்கப்படுகிறோம். நாட்டில் உள்ள 93% அமைப்பு சாராத் தொழிலாளர்களில் 55% கட்டுமான தொழிலாளர்கள் என்று ஒரு ஆய்வு சொல்கிறது. ஆகவே, இந்த மாபெரும் சக்தியை 2024 தேர்தலில் மோடி ஆட்சியை தோற்கடிப்பதற்காக அணிதிரட்ட வேண்டும். அப்போது தான் நாம் நமது உரிமைகளை மீட்டெடுக்க முடியும்.

## இந்திய கட்டுமான தொழிலாளர் கூட்டமைப்பு  சிஐடியு மாநிலத் தலைவர் தோழர் கே.பி. பெருமாள்




இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் முதன் முதலாக கட்டுமான தொழிலாளர்களுக்கு என்று நலச் சட்டம் கொண்டுவரப்பட்டது. 1982ஆம் ஆண்டில் அரசாணை போடப்பட்டு நீண்ட போராட்டத்திற்குப்பின் 1994ல்தான் நல வாரியங்கள் உருவாக்கப்பட்டன. இதற்கு மிக நீண்ட நெடிய போராட்டம் தேவைப் பட்டிருக்கிறது. அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு, கட்டுமான தொழிலாளர்களுக்கு நலப் பயன்களை வழங்குவதிலே கேரளா முதல் மாநிலமாக திகழ்கிறது. இப்போது கொண்டு வந்திருக்கக்கூடிய இஸ்ரம் திட்டம் நல வாரியத்தை ஒழித்துக்கட்டும் நோக்கம் கொண்டது. அவர்கள் எல்லாவற்றையும் ஒற்றைத் தன்மையுடன் பார்க்கிறார்கள். ஒரு தொழிலாளிக்கு ஒரே ஒரு நலவாரிய அட்டை என்று சொல்லி அது இஸ்ரம் அட்டை தான் என்று சொல்கிறார்கள். எக்காரணத்தைக் கொண்டும் இஸ்ரம் திட்டத்தோடு நல வாரியங்களை இணைக்க அனுமதிக்க கூடாது. இப்போது தமிழக நல வாரியத்தில் 4000 கோடி ரூபாய் இருப்பு இருக்கிறது. இது போன்ற பல்வேறு மாநிலங்களில் இருக்கின்ற தொகையை கபளீகரம் செய்ய ஒன்றிய மோடி அரசு முயற்சி செய்கிறது. பல்வேறு மாநிலங்களில் பல்வேறு வகையான நலத்திட்டங்கள் உள்ளன. அது கல்வி உதவி திட்டமாக இருக்கலாம் அல்லது ஓய்வூதியமாக இருக்கலாம் அல்லது திருமண உதவியாக இருக்கலாம் பாரதூரமான வித்தியாசங்கள் நிலவுகின்றன. இது களையப்பட்டு அனைத்து மாநில தொழிலாளர்களுக்கும் அதிகபட்ச நலவாரிய பயன்கள் கிடைப்பதை உத்தரவாதம் செய்ய வேண்டும். கன்னியாகுமரி மண் ஒரு தியாக பூமி. இங்கே முற்போக்கு இயக்கங்கள்,மொழியை பாதுகாப்பதற்கான இயக்கங்கள் நடத்திய வரலாறு உண்டு. பாஜக மக்களை துண்டாட முயற்சிக்கிறது. அதை அனுமதிக்க கூடாது. 2024 தேர்தலில் மோடியை தோற்கடிக்க வேண்டும். இடதுசாரி தொழிற்சங்க இயக்கத்தை, ஒற்றுமையை பலப்படுத்துவோம்.

**தொழிலாளர் விடுதலை முன்னணியின் மாநில அமைப்பாளர் தோழர். பேரறிவாளன்**




விவசாயிகள் விரோத வேளாண் சட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்து தமிழ்நாட்டிலிருந்து வாக்களித்த ஒரே நாடாளுமன்ற உறுப்பினர் ரவீந்திரன் ஆவார். இன்றைய தினம் உயர் நீதிமன்றம் அவர் நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது என்று அறிவித்திருக்கிறது. அவர் சொத்து விவரங்களை முறையாக தெரிவிக்கவில்லை என்ற வழக்கில் இது போன்ற தீர்ப்பு வந்திருக்கிறது. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் கையிருப்பு தொகையாக ரூபாய் 4000 கோடி வைத்திருக்கிறது. இது நல வாரியம் சொந்தமாக ஈட்டிய தொகையாகும். நலவாரிய உறுப்பினர்கள் கூட்டத்தில் சமூக நீதி அடிப்படையில் சில தீர்மானங்களை போட்டு நாங்கள் அனுப்பும் போது, அங்கே உள்ள ஐஏஎஸ் அதிகாரிகள், அவர்கள் சனாதன வாதிகளாக இருக்கின்ற காரணத்தால் அந்த தீர்மானங்களை திருப்பி அனுப்பி விடுகிறார்கள். ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள். தமிழ்நாட்டில் 10 மணி நேரம் 12 மணி நேரம் என வேலை நேரத்தை நீட்டிக்க தொழிற்சாலைச் சட்டத்தில் திருத்தத்தை மேற்கொண்ட போது இங்கே உள்ள தொழிற்சங்ககள் அனைத்தும் ஒன்றாக சேர்ந்து எதிர்ப்புக் குரல் எழுப்பினோம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொழிலாளர் முன்னேற்ற சங்க பேரவையும் எதிர்ப்புக் குரல் எழுப்பியது என்பது முக்கியமானது. மூன்று அமைச்சர்கள் கொண்ட குழுவுடன் தொழிற்சங்கங்கள் பேச்சுவார்த்தை நடத்திய பின்னணியில் முதலில் அந்த சட்டத் திருத்த அமலாக்கம் நிறுத்தி வைக்கப்பட்டது. பிறகு அந்த சட்ட திருத்தத்தையே திரும்பப் பெறுவதாக முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்கள்.

வருகின்ற ஆகஸ்ட் 9 பெருந்திரள் அமர்வு போராட்டத்திற்கு நாமெல்லாம் தயாராக வேண்டும். விலைவாசி விண்ணைத் தொடும் வகையில் உயர்ந்து கொண்டிருக்கிறது. ஆர்எஸ்எஸ் பரிவாரங்கள் அரசியலமைப்பு சட்டத்தை ஒழித்துக் கட்டுவதை நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறார்கள். 2024 இல் பரந்த ஒற்றுமையோடு மோடி ஆட்சியை தோற்கடிக்க உறுதி ஏற்றுக் கொள்வோம்.

**ஏஐடியூசி கட்டிடத் தொழிலாளர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் தோழர் என்.செல்வராஜ்**




ஒன்றிய மோடி அரசின் தொழிலாளர் விரோத சட்டங்களை திட்டங்களை முறியடிக்க இடதுசாரி இயக்கங்கள் ஒன்றுபட்டு போராட வேண்டியது காலத்தின் தேவை என்று குறிப்பிட்டார்.

# சாதி தீண்டாமை தடுப்பு சுவர் அபாயம்!!




கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் வட்டம் மாத்தூர் ஊராட்சியில் தலித் மக்கள் வசிக்கும் பகுதியில் காலங்காலமாக நடந்து செல்லும் வழி பாதையில் குறுக்கே தீண்டாமை தடுப்புச் சுவர் எழுப்பப்பட்டுள்ளது. அப்பகுதி மக்கள் பேருந்து நிலையம் எளிதாக வந்தடையவும் பள்ளி மாணவ மாணவிகள் அரசு பள்ளிக்கு வந்து சேர்வதற்கும் பிரதான மான வழிப் பாதையாக அப்பாதை உள்ளது. மேலும் அப்பகுதிவாழ் மக்களுக்கு இயற்கை பேரிடர்களில் தங்களை காத்துக் கொள்ள வீடுகள் கட்டி குடியிருப்பதற்கான வீடுகள் கட்டுவதற்கான வாகனங்களில் மண் கற்களை ஏற்றிக் கொண்டு வருவதற்கும் வேறு மாற்று பாதையோ விரிவாக இல்லை. இந்நிலையில் கடந்த காலத்திலும் தற்போதும் ஊராட்சித் தலைவராக உள்ளவர் அப்பகுதி மக்களுக்கு வழிப்பாதைக்கு சிமெண்ட் சாலை அமைத்து தர ஏற்பாடு செய்து நின்று போனது. இவர் தலைவராவதற்கு முன் வழிப்பாதையை அமைத்துத் தருகிறேன் என தேர்தல் வாக்குறுதி கொடுத்தார். ஆனால், தற்போது தீண்டாமை தடுப்புச் சுவர் எழுப்பப்பட்டுள்ளது. இதனையொட்டி கள ஆய்வு செய்து, தீர்வு காண மக்களைத் திரட்ட முடிவு செய்யப்பட்டது. தீண்டாமைச் சுவரை அகற்றிட கோரி




இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்- லெனினிஸ்ட்), இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலை சிறுத்தைகள் கட்சி, தந்தை பெரியார் திராவிட கழகம், மக்கள் அதிகாரம், திராவிடர் கழகம், புரட்சி பாரதம், லோக் ஜனசக்தி கட்சி, தீண்டாமை ஒழிப்பு முன்னணி, தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம், கம்யூனிஸ்ட் ஒர்க்கர்ஸ் பார்ட்டி மற்றும் தமிழ் வழிக் கல்வி இயக்கம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் சேர்ந்து மக்களைத் திரட்டி, முறையாக மனு கொடுக்கப்பட்டு பின்னர் சாலை மறியல் போராட்டம் நடத்தப்பட்டது. அதன் காரணமாக 8.7.2023 அன்று சின்னசேலம் வட்டாட்சியர் தலைமையில் அமைதிப் பேச்சு வார்த்தை நடந்தது. பேச்சுவார்த்தையில் மக்களுக்கான வழிப்பாதையை மறித்து சுவர் எழுப்பியவர்களின் பட்டாவை ரத்து செய்வதாகவும் பிரச்சனைக்குரிய இடத்தை மறு அளவீடு செய்து சுவரை அகற்றவும் முடிவு செய்யப்பட்டது. ❑

## ஏஐசிசிடியு தஞ்சை மாவட்ட மாநாடு




*ஏஐசிசிடியு தஞ்சை மாவட்ட மாநாடு கும்பகோணத்தில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் ஏஐசிசிடியு தமிழ்நாடு மாநிலப் பொதுச் செயலாளர் தோழர் கே.ஞானதேசிகன், இகக(மாலெ) தமிழ்நாடு மாநிலச் செயலாளர் தோழர் பழ.ஆசைத்தம்பி உள்ளிட்டோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டார்கள்.*

## நூறு நாள் வேலைத் திட்டத்தை நகர்புறப் பகுதிக்கு விரிவுபடுத்தக் கோரி ஆர்ப்பாட்டம்




*தென்காசி மாவட்டம் சிவகிரியில், 100 நாள் வேலைத் திட்டத்தை சிவகிரி பேரூராட்சிப் பகுதிக்கு விரிவுபடுத்த வேண்டும், சிவகிரியில் உள்ள பேங்க் ஆப் இந்தியா வங்கிக் கிளைக்கு தமிழ் தெரிந்த ஒருவரை மேலாளராக நியமிக்க வேண்டும், சுத்தமான குடிநீர் முறையாக விநியோகம் செய்யப்பட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இகக(மாலெ), அயர்லா மற்றும் முற்போக்கு பெண்கள் கழகம் சார்பாக 13.7.2023 அன்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு தோழர் குருசாமி தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டத்தில் இகக(மாலெ) தென்காசி மாவட்டச் செயலாளர் தோழர் ஐயப்பன், ஏஐசிசிடியு மாவட்டத் தலைவர் தோழர் அயூப்கான், முற்போக்கு பெண்கள் கழகத் தோழர் பிச்சுமணி ஆகியோர் உரையாற்றினர். பின்னர் பேரூராட்சி செயல் அலுவலரிடம் மனு அளிக்கப்பட்டது.* ❑

## சுமைப் பணியாளர்களுக்கு அரசியல் உரிமையை மறுக்காதே வாக்குரிமையை வழங்கு!



*கடந்த 7.7.23 அன்று சென்னையில் தொழிலாளர் ஆணையர் முன்னிலையில் ஆகஸ்ட் மாதம் நடைபெற உள்ள சங்க அங்கீகாரத் தேர்தல் தொடர்பாக ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் ஏஐசிசிடியு சார்பாக சங்கத்தின் மாநிலப் பொருளாளர் தோழர் பி.டி.ராஜசேகர் கலந்து கொண்டார். சங்க அங்கீகாரத் தேர்தலில் நிர்வாகம் சுமைப் பணியாளர்களுக்கு வழக்கம்போல் ஜனநாயக விரோதமாக வாக்குரிமை வழங்கவில்லை. இது ஜனநாயக ரீதியாக தேர்தலை நடத்த வேண்டும் என்ற நீதிமன்ற தீர்ப்புக்கு முரணானது ஏஐசிசிடியு, ஏஐடியுசி, புட் அண்டு அலைடு சங்கங்கள் மட்டும் ஆட்சேபணை தெரிவித்தன. சங்கம் சார்பாக ஆட்சேபணை தெரிவித்து அரசுக்கும் தொழிலாளர் ஆணையருக்கும் ஆட்சேபணைக் கடிதம் அனுப்புவது என்றும் மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டங்களை நடத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் முதல் கட்டமாக, சங்க அங்கீகாரத் தேர்தலில் சுமைப் பணியாளர்களுக்கு அரசியல் உரிமையை மறுக்காதே வாக்குரிமையை வழங்கு என்ற முழக்கத்துடன் 13.7.23ல் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு தர்ணா போராட்டம் நடைபெற்றது. தர்ணா போராட்டத்தில் சங்கத்தின் மாநிலத் தலைவர் தோழர் சங்கரபாண்டியன், மாநிலப் பொதுச் செயலாளர் தோழர் கோவிந்தராஜ் உள்ளிட்ட தலைவர்கள் கலந்து கொண்டனர்.*

## அகில இந்திய தூய்மைப்பணியாளர்கள் சங்க தேசியக்குழு கூட்டம்

*அகில இந்திய தூய்மைப்பணியாளர் சங்கத்தின் தேசியக் குழுக் கூட்டம் கர்நாடகா மாநிலம் பெங்களூரில் 2023 ஜுலை 15-16 தேதிகளில் நடைபெற்றது. ஏஐசிசிடியு அகில இந்திய தலைவர் வீ.சங்கர், தூய்மைப்பணியாளர் சங்கத்தின் அகில இந்தியத் தலைவர் உதய்பட், பொதுச் செயலாளர் சியாம்லால்ஜி, கர்நாடக மாநிலத் தலைவர் நிர்மலா, பொதுச் செயலாளர் மைத்ரேயி, அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர் சங்க தேசியத் தலைவர் கிளிப்டன் ஆகியோர் கலந்து கொண்டு உரை யாற்றினர். அந்தக் கூட்டத்தில் தமிழ்நாட்டில் இருந்து கோவை தோழர் வெங்கடாசலம் தென்காசி தோழர் வேல்முருகன் ஆகியோருடன் தூய்மைப் பணியாளர் சங்கத் தோழர்கள் கலந்து கொண்டனர்.* ❑



# 7.7.2023 அன்று தோழர் சுகுந்தன் அவர்களது இறுதி அஞ்சலி நிகழ்வில் இகக(மாலெ) மத்தியக்குழு உறுப்பினர் தோழர் பாலசுந்தரம் பேசியது



தோழர்களே, நண்பர்களே,

நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக புரட்சிகர பயணத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட தோழர் சுகுந்தன் உடலின் முன் கூடி அஞ்சலி செலுத்துகிறோம். இதே நேரத்தில் கன்யாகுமரியில் கட்டுமான சங்க மாநில மாநாட்டில் கூடியுள்ள தோழர்கள் அஞ்சலி செலுத்திக் கொண்டிருக்கின்றனர். தோழர் சதிஷ் கூறியதைப் போல் தோழர் ஏ.வி. இங்குள்ள தொழிற்சங்க, தொழிலாளர் இயக்கத்தின் அடையாளமாக இருந்தார். அந்த அடையாளத்தின் தொடர்ச்சியாக தோழர் சுகுந்தன் இருந்தார். உண்மை. தொழிலாளர்களது அனைத்து கோரிக்கைகளும் கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கான போராட்டங்களும் தொய்வின்றி தொடரும் எனவும் உங்களிடையே உறுதியளித்தார். எவ்விதமான வெற்றிடமும் இருக்காது எனவும் கூறினார். இது மிகவும் முக்கியமான உறுதிமொழி.

உண்மையில் வெற்றிடமென்று எதுவும் இருப்பதில்லை. ஒருமுறை தோழர் நாகபூஷன் பட்நாயக் சொன்னார். தலைவர்கள் நுரை போன்றவர்கள்; மக்கள் கடல் அலை போன்றவர்கள். நுரைகள் கலைந்துவிடும். அலைகள் நிரந்தரமாக இருக்கும். அலைகள் இருக்கும் வரை நுரைகள் இருந்துகொண்டே இருக்கும்.

திருடப்பட்ட தொழிலாளரது உழைப்பு மூலதனமாகிறது. முதலாளிகளை, முதலாளித்துவ சமுதாயத்தை உருவாக்குகிறது. தொழிலாளரது களவாடப்பட்ட கனவு, தொழிற்சங்க இயக்கத்தை, தொழிலாளர் போராட்டங்களை உருவாக்குகிறது. தொழிலாளர் தலைவர்களையும் உருவாக்குகிறது. எனவே வெற்றிடத்துக்கு வேலை இல்லை. எனவே கடல் இருக்கும் வரை அலைகள் இருந்து கொண்டே இருக்கும். தொழிலாளர் இருக்கும் வரை தொழிலாளர் போராட்டம் இருந்து கொண்டே இருக்கும்.

இதற்கு சாட்சி, கடந்த கால தொழிலாளர் போராட்டங்களே. மிகவும் பின்தங்கிய சமூகத்தினர், படு மோசமாக சுரண்டப்பட்ட தொழிலாளர்கள் சங்கமாக நின்று முதலாளிகளை எதிர்த்துப் போராடியதை ஆம்பூர், வாணியம்பாடி அறியும். பர்தாவுடனும் பர்தாவை விலக்கியும் போராடிய இஸ்லாமிய பெண் தொழிலாளர் இந்து தொழிலாளருடன் கரம்கோர்த்து போராடியதை படிப்பாளிகள், படைப்பாளிகள், கலைஞர்களும் அறிவார்கள். என்னைப் போன்றவர்கள் அந்தப் போராட்டங்களை நேரில் கண்டு ஊக்கம் பெற்றிருக்கிறோம்.

இத்தகைய போராட்டங்களுக்கு அப்போதைய வடார்க்காடு, தருமபுரி மக்கள் போராட்டங்கள் ஊக்கமளித்ததை தோழர் ஏ.வி. பலரிடமும் பகிர்ந்து கொண்டிருக்கிறார்.

தோழர் சுகுந்தன் காட்டாறு போன்றவர். எப்போது? எப்படி? வரும் என்று தெரியாது. காட்டாற்றுக்கு, கரைகளுக்கு இடையே ஓடுவது கஷ்டம். அவர் கட்சிக்குள்ளேயே இருந்தாலும் ஏராளமான பரிசோதனைகளை மேற்கொண்டதை தோழர் முருகேசன் சுட்டிக்காட்டினார். பரிசோதனைகள் தவறில்லை. ஆனால் அவை இயற்கை விதிகள், சமூக விதிகளுக்கு உட்பட்டவை. எந்த பரிசோதனை முடிவும் சமூகத்துக்கு பயன்பட வேண்டும். தோழர் சுகுந்தன் தோழர் ஏ.வியின் தொடர்ச்சியாக இருந்தாலும் அவர் ஆம்பூர், வாணியம்பாடியின் அடையாளமாகத் தங்கிவிடவில்லை. இங்குள்ள தொழிற்சங்க, தொழிலாளர் போராட்டத்துக்கு ஒரு புரட்சிகர வழிமுறை, ஒரு அகில இந்திய தலைமை தேவை என்பதை உணர்ந்திருந்தார். ஆகவேதான் அவர் தோல், தோல்பொருள் தொழிலாளர் சங்கத்தை அந்த நிர்வாகிகளின் ஒப்புதலோடு ஏஐசிசிடியு தொழிற்சங்கத்தில் இணைத்தார். அதன் மாநில துணைத் தலைவராகவும் உயர்ந்தார்.

தோழர் சுகுந்தன், இந்தியாவையும் இந்திய மக்களையும் சூழ்ந்துள்ள பாசிச பேராபத்தையும் உணர்ந்திருந்தார். எனவேதான் அவர் கட்சியின் 11வது கட்சிக் காங்கிரசில், பாசிசத்திற்கெதிரான ஒரு போராளியாக உற்சாகமாக பங்களித்தார். நான்கு சட்டத் தொகுப்புகள் மூலம் தொழிலாளரது கால்களுக்கும் கைகளுக்கும் விலங்கிட்டு கார்ப்பரேட் முதலைகளுக்கு உணவாக்கும் சதித்திட்டம்; கூடுவதற்கு, பேசுவதற்கு, எழுதுவதற்கு தடையென இந்திய ஜனநாயகத்தை அழித்துவரும் மோடி ஆட்சியை வீழ்த்துவதுதான் தலையாய உடனடிப் பணி என்பதை உணர்ந்திருந்தார் தோழர் சுகுந்தன். அந்த தெளிவோடுதான் பட்னா காங்கிரசில் தோழர் சுகுந்தன் பங்கெடுத்துக் கொண்டார்.

சென்னை சிம்சன் தொழிற்சாலையில் பணியாற்றி, முழுநேர புரட்சியாளராக கிராமப்புரங்களுக்குச் சென்ற தோழர் சுகுந்தனது அரசியல் சகா டி.கே.எஸ். ஜனார்த்தனன் இறந்தபோது, இங்கு பார்த்தது போல, டி.கே.எஸ் உடலைப் பார்த்து பெண்கள் கதறி அழுதனர். "இனி உங்கள பார்க்க முடியாதா"? என்று கூறி அழுதனர். அப்போது நான் கூறினேன்; டிகேஎஸை நீங்கள் ஏன் பார்க்க முடியாது? நீங்கள் நடத்தும் ஒவ்வொரு போராட்டத்திலும் டிகேஎஸை பார்க்க முடியும்" என்று கூறினேன். அதையே இங்கு மீண்டும் கூறுகிறேன். தோழர் சுகுந்தனை நீங்கள் நடத்தும் தொழிலாளர் போராட்டங்களில் பார்க்க முடியும். பாசிச எதிர்ப்பு போராட்டத்தில் மீண்டும் பார்க்க முடியும். தோழர் சுகுந்தனுக்கு புரட்சிகர செவ்வஞ்சலியை தெரிவித்துக் கொள்கிறேன். ❑

MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 20.07.2023 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023

# கட்டுமானத் தொழிலாளர் சங்கத்தை போராட்ட இயக்கமாக வளர்த்திடுவோம்!







Owned and Published bys; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh